பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 30 சனிக்கிழமை 16.11.2019 கதிர் 11

**இது ரகசியம் அல்ல!**

தேர்தல்கள் நீதி, நேர்மையாக நடத்தப்பட வேண்டுமானால் தேர் தல் சட்டங்கள் தயவு, தாட்சண்யம் பார்க்காமல் – பதவி நிலை வேறு பாடுகள் பார்க்காமல் – முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

பக்கம் 02

# இன்று ஜனாதிபதித் தேர்தல்!

## 2 லட்சம் அரச ஊழியர்கள், 60 ஆயிரம் பொலிஸார் தயார் நிலையில்

கொழும்பு, நவ. 16

இலங்கையின் எட்டாவது ஜனாதி பதித் தேர்தலின் வாக்குப் பதிவு இன்று இடம்பெறவுள்ள நிலையில், இரண்டு லட்சம் அரச ஊழியர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். வாக் களிப்பு நிலையங்கள் மற்றும் வாக் கெண்ணும் நிலையங்களில் இவர்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

இந்நிலையில், தேர்தல்கள் தொடர் பிலான பாதுகாப்பு மற்றும் அது சார்ந்த பணிகளில் 60 ஆயிரத்து 175 பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனவும் அவர்கள் நேற்றுமுன்தினம் அந்தப் பகுதிகளுக்கு கடமைக்காகச் சென்றுள் ளனர் எனவும் பொலிஸ் பேச்சாளர் '

பக்கம் 03

# முப்படைகளையும் முகாம்களுக்குள் முடக்கியது தேர்தல்கள் ஆணையம்!

## வாக்களிப்பு முடியும் வரை பாதுகாப்பு பொலிஸ் மற்றும் அதிரடிப் படையிடம்

கொழும்பு, நவ 16

இன்று மாலை 5 மணிக்கு ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்பு முடிவடையும் வரையில் முப்படை களையும் முகாம்களுக்குள் முடங்கியிருக்குமாறு காட்டமான உத்தரவு ஒன்றைக் கொடுத்துப் பணித்திருக்கிறது தேர்தல் ஆணையம்.

இன்று வாக்களிப்பு முடிவடையும் வரை பொதுப் பாதுகாப்புப் பணிகளில் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்புக் குழுவினர் மட்டுமே ஈடுபடுத்தப்படுவர் – ஈடுபடுத்தப் படவேண்டும் – என்று தேர்தல் ஆணையம் பணித்துள்ளது.

பக்கம் 02

## தவறாது இன்று வாக்களியுங்கள்! நல்லை ஆதீன முதல்வர் கோரிக்கை



யாழ்ப்பாணம், நவ. 16

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை அனைவரும் எந்த தயக்கமும் இன்றிப் பயன்படுத்த வேண்டும். எவரும் தேர்தலைப் புறக்கணிக் கக் கூடாது என்று நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

பக்கம் 03



## 1000 நாள்கள் கடந்தும் தீர்வு எதுவுமே இல்லை!

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கதறல்

வவுனியா, நவ. 16

வவுனியாவில் சுழற்சிமுறை உணவு தவிர்ப்பு போராட்டத் தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம், 1000 நாள்களை எட்டியுள்ளது.

பக்கம் 03

## ஒவ்வொரு வாக்காளருக்கும் இம்முறை 344 ரூபா செலவு!

கொழும்பு, நவ. 16

இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்த லுக்கான மொத்த செலவு 550 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், ஒரு வாக்காளருக் காக இம்முறை தேர்தல்கள் ஆணைக்குழு 344 ரூபாவைச் செலவிடவுள்ளதாகதாக

பக்கம் 03

## தேர்தல் விதிமுறைகளை மீறினெரென 90 பேர் கைது

கொழும்பு, நவ. 16

இன்று ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் விதிமுறை மீறல் குற்றச்சாட்டுக் களில் இதுவரை 90 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த 222 முறைப்பாடு களில் 115 சட்ட மீறல் சம்பவங்களின்

பக்கம் 03

## வடக்கு மக்கள் அச்சமின்றி இன்று வாக்களிக்க முடியும்

### தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையம் அறிவிப்பு

கொழும்பு, நவ. 16

யாழ்ப்பாணம் மற்றும் வன்னி தேர்தல் மாவட் டங்களைச் சேர்ந்த வாக்காளர்கள் இன்று சனிக்கிழமை ஜனாதிபதியைத்

பக்கம் 03



## வாக்களிக்கக்கூடாது என அச்சுறுத்திக் குண்டுவீச்சு!

கொழும்பு. நவ. 16

கண்டி – கலஹா, நில்லம்ப தோட்டத்தில் அடையாளம் தெரியாத குழு ஒன்று அங்கு வசிப்பவர்களை வாக்களிக்கக்கூடாது என அச்சுறுத்தி வீடு ஒன்றின் மீது பெற்றோல் குண்டு வீசியதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாக தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் மற்றுமொரு வீட்டின் மீதும் பெற் றோல் குண்டு வீசவும் இந்தக் குழுவால் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

## சமூக ஊடகங்களில் வெளிவந்த போலிப் புலனாய்வு அறிக்கை!

கொழும்பு, நவ. 16

ஜனாதிபதித் தேர்தல் தொடர் பில் அரச புலனாய்வுச் சேவை விசேட அறிக்கை ஒன்றை ஜனா திபதியிடம் வழங்கியதாகச் சமூக

பக்கம் 02

## சுன்னாகம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரு ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு பரப்புரை!

### விசாரிக்கச் சென்ற தேர்தல் அதிகாரி செய்தியாளருக்கு இடையூறு

யாழ்ப்பாணம், நவ. 16

சுன்னாகம் எரிபொருள் நிரப்பு நிலை யத்தில் வைத்துத் தேர்தல் விதிமுறை களை மீறி ஜனாதிபதி வேட்பாளர்கள் இருவருக்கான பரப்புரை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அதனை விசாரணை செய்யச் சென்ற தேர்தல் அதி காரியின் கடமைக்கு இடையூறுவிளைவிக் கப்பட்டதுடன், அவருக்கு அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டது.

பக்கம் 03

வித்தியா படுகொலை சூத்திரதாரி சுவிஸ் குமாரைத் தப்ப விட்ட வழக்கு

# தலைமறைவாகியிருக்கும் 2ஆம் பிரதிவாதியான சப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீகஜனின் தாயார் சாட்சியம்

யாழ்.புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியான சுவிஸ் குமாரை பொலிஸ் தடுப்புக்காவலில் இருந்து விடுவிக்க நடவடிக்கை எடுத்தமை தொடர்பில் இரண்டு பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம் சங்கர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் அநுருத்த ஜயசிங்க மற்றும் முன்னாள் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் சுந்தரேஸ்வரன் ரீகஜன் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபரால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதிகளுக்கு எதிராக இரண்டு குற்றச்சாட்டுகளின் கீழ் யாழ். மேல் நீதிமன்றத்தில் ஏற்கனவே குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இந்நிலையில் முதலாவது பிரதிவாதியான முன்னாள்சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் அநுருத்த ஜயசிங்க மன்றில் ஆஜராகிய போதும், இரண்டாவது பிரதிவாதியான முன்னாள் சப் இன்ஸ்பெக்டர் சுந்தரேஸ்வரன் ரீகஜன் மன்றில் ஆஜராகாத நிலையில், இரண்டாவது பிரதிவாதி இன்றி வழக்கிற்கான விளக்கத்தை முன்னெடுப்பதற்கான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது வழக்கின் இரண்டாவது பிரதிவாதியான சப் இன்ஸ்பெக்டர் சுந்தரேஸ்வரன் ரீகஜனின் தாயார் மற்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளும் சாட்சியமளித்தனர்.

2017 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்கு பின்னர் தனது மகனுடன் எவ்வித தொடர்பும் இல்லை எனவும், அவர் எங்குள்ளார் என்பது குறித்து தமக்கு தெரியாது எனவும் சுந்தரேஸ்வரன் ரீகஜனின் தாயார் சாட்சியமளித்துள்ளார்.

தனது மகன் காணாமல் போனமை தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு உள்ளிட்ட வேறு எங்கும் முறைப்பாடு செய்யவில்லை எனவும், அவரைத் தேடும் பணிகளையும் தாம் முன்னெடுக்கவில்லை எனவும் தாயார் தமது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

தனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமையை அறிந்துகொண்டதன் பின்னர், ரீகஜன் சட்டரீதியாக நாட்டிலிருந்து வெளியேறியமைக்கு எவ்வித சாட்சியங்களும் இல்லை எனக் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு அறிவித்தனர்.

இந்நிலையில் இந்த வழக்கு தொடர்பான மேலதிக விசாரணை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## குமாரதேவன் காலமானார்



காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சமூக ஆர்வலரும் ஆழமான பத்திரிகை, சஞ்சிகை, நூல் வாசகருமான குமாரசாமி குமாரதேவன் (வயது – 59) சுகவீனம் காரணமாக யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று இரவு காலமானார்.

யாழ்ப்பாணம் வண்ணை சிவன்கோயிலில் சண்முகம் உணவு நிலையச் சுற்றாடலில் பல அன்பர்களுடனும் பழகி வந்த அவர் ‘குமார்’ அண்ணன் என்று அழைக்கப்பட்டவர்.

தமிழ் நூல்கள், பத்திரிகைகள், இலக்கியங்களை ஆர்வமுடனும் ஆழமாகவும் வாசிக்கும் சுவைஞர் அவர். நடுநிலையான விமர்சகரும் கூட.

தமிழருவி சிவகுமாரனின் துணைவியாரின் சகோதரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரமாக வாக்களிப்பதற்கு உகந்த சூழல் பேணப்படுகிறது

### ஜனாதிபதி மைத்திரிபால பெருமிதம்

கொழும்பு,நவ.16

இலங்கையில் இன்று 16ஆம் திகதி இடம்பெறும் ஜனாதிபதித் தேர்தலில் நாடு முழுவதும் உள்ள சகல வாக்காளர்களும் சுதந்திரமாக தமது வாக்கைப் பதிவு செய்வதற்கான சூழல் தற்போது நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்றிரவு தாம் வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

எனது பணிப்புரைக்கமைய பொலிஸார் மற்றும் முப்படையினர் உள்ளிட்ட பாதுகாப்புத் துறையினர் அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தனர்.

தேவையற்ற பிரசாரங்களையும் வதந்திகளையும் நம்பி ஏமாறாது, மக்கள் தமக்கான வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்குகளைப் பதிவு செய்ய வேண்டும். ஜனநாயகம் பலப்படுத்தப்பட்டுள்ள ஒரு நாட்டில் பிரஜைகளின் அதிகாரமாகவும் முதன்மைக் கடமையாகவும் பொறுப்பாகவும் அமைவது தமது விருப்புக்குரிய ஒருவருக்காகத் தமது வாக்கைப் பதிவு செய்வதே ஆகும் – என்று குறிப்பிடப்பட்டுள்ளது

## சமூக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்களில் வெளிவந்துள்ள செய்தி முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என்று பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேகர ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் 2019.11.05 திகதி அன்று அரச புலனாய்வு சேவையினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட விசேட அரச புலனாய்வு அறிக்கை’ என்ற தலைப்பில் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள ஆவணத்தில் உள்ள விடயங்கள் முற்றாக உண்மைக்குப் புறம்பானவை என தெரிவித்துக்கொள்கின்றோம்.

அரச புலனாய்வுச் சேவையில் உள்ளடங்கிய ஸ்ரீலங்கா பொலிஸ் எப்பொழுதும் நிறுவனமாக சுயாதீன நிறுவனம் என்ற ரீதியில் இந்த உண்மைக்குப் புறம்பான ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுதலோ அல்லது தலையிடுதல் அல்லது ஜனாதிபதி தேர்தலுக்கு அமைவாக எந்தவித கணிப்பீட்டையும் மேற்கொள்வது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் இலங்கை பொலிஸ் முழுமையான கவனத்தை செலுத்துவது இந்த ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமாகவும் அமைதியான முறையிலும் நடைபெறுவதற்குப் பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்துவதே ஆகும். இது பொலிஸின் முக்கிய பணியாகவும் அமைந்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறான உண்மைக்கு புறம்பான கடிதம் ஒன்றைச் சமூக வலைப்பின்னலில் வெளியிட்டநபருக்கு எதிராக விசாரணை நடத்துவதற்காகக் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் இது சமர்ப்பிக்கப்படவுள்ளது –என்றுள்ளது. (ஐ)

## முப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான பணிப்புரைக் கடிதங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைகளின் தளபதிகள் போன்றோருக்கும் தேர்தல் ஆணையகம் அனுப்பி வைத்துள்ளது.

அத்தியாவசியத் தேவை ஏற்பட்டு பொலிஸ் தரப்பிலிருந்து அழைப்பு வந்தால் மட்டுமே முகாம்களிலிருந்து படையினர் உதவிக்குச் செல்ல வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அறியபட்டது.

யாழ்ப்பாணத்திலும், பளையிலும் இராணுவத்தினர் இரண்டு சோதனைத் தடை நிலைகளைப் புதிதாகத் திறந்துள்ளனர் என்றும்–

அவற்றைத் தேர்தல் சமயத்தில் மூடிவிட்டு வெளியேற அவர்கள் மறுத்து வருகின்றனர் என்றும்–

தேர்தல் ஆணையகத்துக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து ஆணையம் இந்த விடயத்தை மிக ‘சீரியஸாக’ எடுத்ததாகத் தெரிகிறது.

தேர்தல் கடமையைக் கவனிப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு விசேடமாக அனுப்பி வைக்கப்பட்ட பிரதி பொலிஸ் மா அதிபர், ரவி செனகரத்னவுக்கு இது தொடர்பாக விடயங்களைக் கையாளும்படி தேர்தல்கள் ஆணையம் பணித்ததை அடுத்து, அவர் நேரடியாக இந்தச் சோதனைச் சாவடிக்குச் சென்றார். சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகளுடன் ஆரம்பத்தில் முரண்படும் நிலைமை காணப்பட்ட போதிலும், இறுதியில் அந்தத் தடை நிலைகளை மூடிவிடுவிதற்கு அவர்கள் இணங்கினர் எனத் தெரிய வந்தது.

இதேபோல மதவாச்சியில் இலங்கை இராணுவமும், மன்னாரில் இலங்கைக் கடற்படையும் புதிதாகத் திறந்த இரு சோதனைச் சாவடிகளில் இருந்தும் படையினர் விலக்கப்பட்டனர்.

இன்று மாலை தேர்தல் வாக்களிப்பு முடிவடையும் வரை முப்படையினரும் வெளிநடமாட்டங்களுக்குப் பெருமபாலும் வரமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

# தேர்தல் முடிவு வெளியான பின்னரும் அமைதி பேணஜ் கோருகிறார் பிரதமர்

ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர் சட்டம் மற்றும் ஒழுங்கைக் பாதுகாத்து அமைதியான முறையில் அனைவரும் செயற்பட வேண்டும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக பிரதமரினால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் ஊடாக சுயாதீன ஆணைக் குழுக்களை ஸ்தாபித்து நாடு முழுவதும் ஜனநாயகத் தன்மையுடையதும், நியாயத்திற்குட்பட்டதுமான அமைதியான சூழலொன்றை உருவாக்க நாம் நடவடிக்கை எடுத்தோம். அத்தகைய ஜன நாயக, நியாயாதிக்கசூழலில் இடம்பெறுகின்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தங்கள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் சுயாதீன ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கு அவசியமான பாதுகாப்பு செயற்பாடுகளுக்காக முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையில் சுதந்திரமானதும், நியாயமானதும், அமைதியானதுமான தேர்தல் ஒன்று நடைபெறுவதற்கு உரிய நிறுவனங்களுக்கும், அதிகாரிகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதே இந்த நாட்டின் பிரஜை என்ற வகையில் எம் அனைவரினதும் கடமையாகும். தற்போது நாம் இத்தகைய சுதந்திரமான சூழ்நிலையை மேலும் வலுப்படுத்த வேண்டும். மீண்டும் கடந்தகாலத்தில் நிலவிய அநாகரிகமான அரசியல் கலாச்சாரம் கட்டியெழுப்பப்படாமல் இருப்பதற்கு எம்மால் இயலுமான அளவிற்கு ஒத்துழைப்பு வழங்குவோம். எனவே, அனைவரும் வாக்களிப்பதுடன், இந்த ஜனாதிபதி தேர்தல் சுதந்திரமானதும், அமைதியானதுமான முறையில் நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாத்து அமைதியான முறையில் செயற்படுமாறும் அனைவரிடமும் குறிப்பாக கேட்டுக்கொள்கிறேன். என்று அவர் குறிப்பிட்டுள்ளார்

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்படி நடைமுறைப்படுத் தும் துணிச்சல் தேர்தல் ஆணையாளர்களுக்கு இருக்க வேண்டும்.முடிவுகளை தீர்க்கமாக எடுத்துச் செயற்படுத்தாமல், வழவழா கொழகொழ என்று நடந்து கொண்டால் நீதி, நேர்மையான தேர்தல்கள் சாத்தியமற்றே போய் விடும்.

இந்தியாவில் ஒரு தேர்தல் ஆணையாளர் வந்தார். டி.என். சேஷன் என்று பெயர். ‘ஆதி சேஷன்’ என்றால் திருப்பாற் கடலில் விஷ்ணுவின் படுக்கையாக இருக்கும் நாகம். ஆயிரம் தலைகளை உடைய இந்தப் பாம்பு நாராயணனுக்கு மிக நெருக்கமானது.

இந்தியத் தேர்தல் ஆணையாளராக வந்த டி.என்.சேஷன் என்பவரும் தேர்தல் ஆணையகத்தை ஒரே நாளில் உயர்தரக் கட்டமைப்பாக மாற்றிய நாகபாம்பு. இன்று இந்தியத் தேர்தல் கமிஷன் அதிகார வலுமிக்க சுயாதீனக் கட்டமைப்பாகப் புகழப்படும் ஒரு நிறுவனமான இயங்குகின்றது என்றால் அதற்குக் காரணம் அதற்கு அத்திபாரம் போட்ட டி.என்.சேஷன்.

இலங்கைத் தேர்தல் கமிஷனுக்கும் சேஷன் போன்ற ஒரு தலைமைத் தேர்தல் ஆணையாளர் இன்றியமையாதவராகத் தேவைப்படுகின்றார். அரசமைப்பும் சட்டங்களும் தமக்கு வழங்கியுள்ள அதிகாரங்களைக் கையில் எடுத்து தயவு, தாட்சண்யம் காட்டாமல் பிரயோகித்து, எப்போதும் நீதியான தேர்தலுக்கு வழிப்படுத்தும் ஒரு துணிச்சல்காரர் அவசியம். அப்படி ஒருவர் வருவதற்கான இடைவெளிகிட்டுமா என்பது கேள்விக் குறிதான்.

சாம்பிளுக்கு ஒரு சம்பவம். கிழக்கில் ஒரு தமிழர் தலைவர். அப்படி தம்மைக் கூறிக்கொள்பவர். போராட்ட சமயத்தில் அவர் செய்த துரோகத்தனம் நாடறியும். ஆனால், இப்போதெல்லாம் காட்டிக் கொடுத்தவர்களைச் சுட்டுவதற்கு ‘காக்கை வன்னியன்’ என்ற பெயர் பயன்படுத்துவதில்லை. இந்தத் ‘தலைவரின்’ பெயரைத் தானே அதற்குப் பதிலாக உபயோகிக்கிறார்கள்!

இப்போதும் பயந்து, பயந்து தான் பொதுமோடைகளுக்கு வர வேண்டிய ஒரு நிலைமை அவருக்கு.

அண்மையில் கிழக்கில் முஸ்லிம்களுக்கு எதிராக மிக மோசமான உரை ஒன்றை ஆற்றினார் அவர். முஸ்லிம்களின் கொட்டமும் அட்டகாசமும் கூடிவிட்டன என்றும், அதை அடக்குவதற்கு இன்னாருக்கு வாக்களிக்க வேண்டும் என்றும் மிகப் பச்சையாகப் பேசினார் அவர்.

அந்தப் பேச்சின் ஒளிப்பதிவை செவிமடுத்த தேர்தல் ஆணையாளர் ஒருவர், இனங்களுக்கு இடையில் குரோகதத்தையும், கலவரத்தையும் ஏற்படுத்துவதைத் தடுக்கும் சர்வதேச சட்டத்தை இலங்கையும் ஏற்றுள்ளதால் அதன் அடிப்படையில் சம்பந்தப்பட்டவரை பிணையில் வெளியே வரமுடியாத வகையில் கைது செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்து, தேர்தல் ஆணையகத்துக்குக் கடிதம் எழுதினார்.

மூன்று ஆணையாளர்களைக் கொண்ட தேர்தல் ஆணையகத்தில் அந்தப் பரிந்துரைக் கடிதம் முடிவு எதுவும் எடுக்கப்படாமல், உறை நிலையில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிகின்றது.

இன்று தேர்தல், வாக்களிப்பு முடிந்த பின்னர் அந்தப் பரிந்துரைக் கடிதத்தை ஆணையம் தூசு தட்டி எடுத்து, ஒப்புக்குச் சப்பாணி போல ஏதும் சமாளிப்பு வேலை செய்யும் என எதிர்பார்க்கலாம்.

தேர்தல் ஆணையம் சுதந்திரமாக இயங்குகின்றது, அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் கீழ் அதற்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்றெல்லாம் கூறப்பட்டாலும், துணிச்சலாக முடிவுகளை எடுத்து, உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும் தலைமைத்துவத்தை அது வழங்குவதாகத் தெரியவில்லை.

அது, இப்போது ஆற்றும் செயற்பாட்டை விமர்சிக்க என்னிடம் ஒரு சொல்தான் இருக்கின்றது. அது, ‘இங்கிலிஷ்’ சொல்ல அல்ல. ஆங்கிலம் படித்தவர்களுக்கு மட்டுமே விசேடமாகப் புரியும் ‘தமிழிஷ்’ அது.

தேர்தல் ஆணையம் இப்போது தேர்தல் விடயங்களை அணுகும் முறைமை எல்லாம் ‘சமாளிபிக்கேஷன்’ தான்....!

–மின்னல்–

## 1000 நாள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை முன்னிட்டு அவர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அதில் கலந்து கொண்டோர் தங்களது வேதனையை கண்ணீர் மல்க வெளிப்படுத்தியமை அனைவரையும் கவலைக்கு உள்ளாக்கியது.

இவ்விடயம் தொடர்பாக காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் இணைப்பாளர் ராஜ்குமார்–

சுழற்சி முறையில் உணவு தவிர்க்கும் 1000ஆவது நாளை இன்று நாங்கள் அனுஷ்டிக்க வந்துள்ளோம்.

இதில் அனைத்து தமிழ் தாய்மார்களும் சுழற்சி முறையில் உணவு தவிர்க்கும் போராட்டத்தில் தொடர்ந்து பங்குபற்றி வருகின்றனர்.

இலங்கை இராணுவத்தால் எங்கள் குழந்தைகளும் அன்புக்குரியவர்களும் கடத்தப்பட்ட காலத்திலிருந்து, நாங்கள் எங்கள் குழந்தைகளையும் அன்பானவர்களையும் தேடிக்கொண்டிருக்கிறோம்.

மேலும் இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சிங்கள அமைச்சர்களை நாங்கள் சந்தித்துக் கலந்துரையாடினோம். ஆனால் எந்தொரு பயனும் கிடைக்கவில்லை.

எங்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் தலைவர்கள் கூட எமது பிரச்சினைகளுக்கு இது வரை தீர்வை பெற்றுக்கொடுக்கவில்லை.

அவர்கள், போர்க்குற்ற விசாரணையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்புவதற்கு பதிலாக, உள்ளூர் விசாரணைக்கு கொண்டு வந்தனர். பின்னர் அவர்கள், உள்ளூர் விசாரணைக்கு 4 ஆண்டு நீட்டிப்பு வழங்கினர்.

இலங்கையின் மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டு வருவதில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலையீட்டைத் தடுக்கும் சதித் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளையும் அன்பானவர்களையும் கண்டுபிடிப்பதற்கு ஒரு போராட்டம் மட்டுமே ஒரு தீர்வைக் கொண்டுவரும் என்று பல சர்வதேச மனித உரிமைக் குழுக்களால் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எங்கள் அர்ப்பணிப்பு முயற்சிகளைத் தொடர வலுவான நாடுகளால் நாங்கள் ஊக்குவிக்கப்பட்டுள்ளோம். ஐ.நா. தொடர்பான சில அமைப்புகள் கூட எங்கள் போராட்டத்தை ஊக்குவித்துள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார். ஆனால் அவர் சொல்வது ஓர் அப்பட்டமான பொய். காணாமல் ஆக்கப்பட்டவர்களை நாங்கள் கண்டிருக்கிறோம்.

இதில் 16 வயதுச் சிறுமி ஜெரோமி காசிப்பிள்ளை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் தலைவி ஜெயவனிதாவின் மகள், 2015 ஆண்டுகளுக்குப் பிறகு ஏனைய சிங்கள மாணவர்களுடன் ஒரு பள்ளியில் காணப்பட்டார்.

எங்களிடமிருந்து கடத்தப்பட்ட எங்கள் குழந்தைகளையும் அன்பானவர்களையும் கண்டுபிடிக்கும் வரை நாங்கள் எங்கள் போராட்டத்தைத் தொடருவோம் – என்றார். (ஐ)

## ஒவ்வொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிடும் நிலையில் அவர்கள் அனைவரும் தேர்தல் பிரசாரத்துக்கு செலவிட்டதாக மதிப்பிடப்படும் மொத்த தொகை 1000 கோடி ரூபாவாகும். அதன்படி ஒரு வாக்காளர் தொடர்பில் வேட்பாளர்கள் செலவிட்ட தொகை 625 ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ தகவல்களின் பிரகாரம், கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் மொத்த செலவு 71 கோடி ரூபாவாகும். அப்போது ஒரு வாக்காளருக்கு செலவிடப்பட்ட தொகை 54 ரூபாவாகும். 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்காக 185 கோடி ரூபாவை தேர்தல்கள் திணைக்களம் செலவிட்டுள்ளது.

இதன்போது வாக்காளர் ஒருவருக்கு 132 ரூபா செலவாகியுள்ளது. அதனடிப்படையில் 2015 ஆம் ஆண்டில் 270 கோடி ரூபாவை தேர்தல்கள் திணைக்களம் ஜனாதிபதித் தேர்தலுக்காக செலவிட்டுள்ள நிலையில், அப்போது ஒரு வாக்காளருக்காக 180 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே இம்முறை ஜனாதிபதித் தேர்தல் செலவீனம் 550 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், வாக்காளர் ஒருவருக்கான செலவு 344 ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்காக வேட்பாளர்களும் தேர்தல்கள் ஆணைக் குழுவும் ஒரு வாக்காளருக்காக செலவிட்ட மொத்த செலவு 965 ரூபாவாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தவறாது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்–

'தேர்தலில் வாக்களிக்க வேண்டியது ஒவ்வொருவரின் ஜனநாயகக் கடமையாகும். அந்தக் கடமையையும் பொறுப்பையும் ஒவ்வொருவரும் செய்யவேண்டும். தேர்தலில் தங்களின் ஜனநாயகக் கடமையான வாக்களித்தலை கட்டாயம் நிறைவேற்ற வேண்டும். ஒவ்வொருவரும் தங்களின் வாக்குரிமையினை பயன்படுத்த வேண்டும்.

வாக்களிப்பது என்பது நமது புனிதமான கடமையாகும். வாக்களிக்கும் உரிமையை அனைவரும் எவ்வித தயக்கமும் இன்றி பயன்படுத்த வேண்டும். தேர்தல் தினத்தன்று வாக்குரிமை பெற்ற அனைவரும் மாலைநேரம் வரை காலம் தாழ்த்தாது நேரகாலத்துடன் வாக்களிப்பு நிலையத்திற்கு சென்று உங்கள் வாக்குகளை பயனுள்ளதாக்க வேண்டும் –என்றார். (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவு செய்வதற்கு வாக்களிக்குமாறு தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் தெரிவித்துள்ளது.

வன்னி மற்றும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டங்களில் உள்ள வாக்காளர்கள் இன்று எவ்வித அச்சமும் இன்றி தமது வாக்குகளைப் பதிவு செய்யுமாறு அந்த நிலையம் கேட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களும் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களும் அடங்குகின்றன. (ஐ)

## சுன்னாகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தேர்தல் விதி மீறலுக்கு பொலிஸார் ஒத்துழைப்பு வழங்கியமையுடன், செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த செய்தியாளரின் அலைபேசியைப் பறித்தெடுத்து அதிலிருந்த சம்பவம் தொடர்பான ஒளிப்படங்களையும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அழித்துள்ளார்.

இந்தச் சம்பவம் சுன்னாகம் கே.கே.எஸ் வீதியில் றொட்டியாலடி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது.

இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தேர்தல் விதி முறைகளை மீறிப் பரப்புரை நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என யாழ்ப்பாணம் தேர்தல்கள் செயலகத்துக்கும் ஊடகங்களுக்கும் அழைப்புகள் வந்தன.

அங்கு இளையோருக்கு வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாகச் சிலர் கூறியுள்ளனர்.

இது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக யாழ்ப்பாணம் தேர்தல்கள் செயலகத்துக்குட்பட்ட தேர்தல் முறைப்பாடுகள் முகாமைத்துவ நிலைய அதிகாரி சம்பவ இடத்துக்கு விரைந்தார். அங்கு செய்தியாளர் ஒருவரும் சென்றிருந்தார்.

அங்கு 30 பேருக்கு மேற்பட்ட இளையோர்கள் அங்கு நின்றனர். தேர்தல் சட்டத்தின் பிரகாரம் பரப்புரைகள் நிறைவடைந்து வாக்களிப்புக்கான பணிகள் இடம்பெறும் காலத்தில் ஆகக் கூடியது 7 பேருக்கு மேல் ஓர் இடத்தில் கூட முடியாது.

அதனால் அங்கு கூடியிருந்தவர்களை அப்புறப்படுத்துமாறு தேர்தல் அதிகாரி பொலிஸாருக்குப் பணித்தார். அத்துடன், அங்கு சுன்னாகம் பொலிஸ் நிலையத்திலிருந்து மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

அதனை அடுத்து தேர்தல் அதிகாரி அங்கிருந்து புறப்பட்டார். எனினும் சிறுதி நேரத்தில் அவர் சம்பவ இடத்துக்குத் திரும்பி வந்தார். அப்போதும் அங்கு இளையோர்கள் கூடியிருந்தனர். அதனால் தேர்தல் அதிகாரி அங்கிருந்து அலுவலகம் ஒன்றுக்குள் நுழைந்து விசாரணைகளை முன்னெடுத்தார். எனினும் தேர்தல் அதிகாரியின் கடமைக்கு அங்கிருந்தவர்கள் இடையூறு விளைவித்தமையுடன், அலைபேசியில் அழைப்பு எடுத்த ஒருவர் ஆட்சி மாறினால் உம்மைத் தூக்குவோம் என அச்சுறுத்தும் பாணியில் உரையாடினார் என அறியமுடிகிறது.

மிரட்டலுக்கு அஞ்சாத அந்த அதிகாரி அங்கிருந்த ஆவணங்களைச் சோதனையிடப் போவதாகக் கூறியுள்ளார். அங்கு ஜனாதிபதி வேட்பாளர்கள் இருவரின் பரப்புரைத் துண்டறிக்கைகள் காணப்பட்டுள்ளன.

இது குறித்து பொலிஸார் உரிய விசாரணையை முன்னெடுத்து நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் அதிகாரி அறிவுறுத்தல் வழங்கினார்.

எனினும் பொலிஸார் ஒத்துழைப்பு வழங்காததால், யாழ்ப்பாணம் தேர்தல்கள் அலுவலகத்துக்குப் பொலிஸ் பொறுப்பதிகாரியை வருமாறு கூறிவிட்டு தேர்தல் அதிகாரி அங்கிருந்து புறப்பட்டார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற வேளை, யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றின் செய்தியாளர் அங்கு ஒளிப்படம் எடுத்துச் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தார்.

அவரை அழைத்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், அலைபேசியை வழங்குமாறு கூறியுள்ளார். தன்னை ஊடகவியலாளர் என அரச தகவல் திணைக்கள அடையாள அட்டையைக் காண்பித்து அறிமுகம் செய்தார். அடையாள அட்டையை வாங்கிய பொலிஸ் உத்தியோகத்தர், செய்தியாளரிமிருந்து அலைபேசியையும் பறித்துள்ளார்.

அலைபேசியில் இந்தச் சம்பவம் தொடர்பில் இருந்த ஒளிப்படங்களை அழித்த அந்த பொலிஸ் உத்தியோகத்தர், காணொலிப் பதிவும் இருக்கின்றதா என்று ஆராய்ந்துள்ளார்.

அதன் பின் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஊடகவியலாளரின் அடையாள அட்டைகளையும் அலைபேசியையும் அந்த பொலிஸ் உத்தியோகஸ்த்தர் ஒப்படைத்துள்ளார்.

அதனையடுத்து சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஊடகவியலாளரிடம் அடையாள அட்டைகளையும் அலைபேசியையும் மீள வழங்குமாறு கூறினார். அதன் பின்னர் அந்தப் பொலிஸ் உத்தியோகஸ்தர் கைபேசியில் உள்ள படங்களை அழித்த பின்னர் அதனைக் கையளித்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக யாழ்ப்பாணம் ஜனாதிபதித் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்தில் ஊடகவியலாளர் முறைப்பாட்டை வழங்கினார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் தேர்தல் அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்று அறிய முடிகிறது. (ஐ)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

60,175 பொலிஸாருக்கு மேலதிகமாக 3500 பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நேரடியாகவே பாதுகாப்பு உள்ளிட்ட கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளமையுடன், எண்ணாயிரத்து 80 சிவில் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தகவல்களின் பிரகாரம், வாக்கெண்ணும் பணிகளில் மட்டும் சுமார் 48 ஆயிரம் அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அதனைவிட ஒரு லட்சத்துக்கும் அதிகமான அரச ஊழியர்கள் வாக்களிப்பு நிலைய பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இவர்களுக்கு மேலதிகமாக சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் நலன்புரி மற்றும் போக்குவரத்து கடமைகளில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறைந்த பட்சம் ஒரு வாக்களிப்பு நிலையத்தில் 8 அரச ஊழியர்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவர் எனவும் வாக்களிப்பு நிலையத்தின் தேவைக்கேற்ப அந்த எண்ணிக்கை அதிகரிக்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகர கருத்துத் தெரிவிக்கையில்,

இம்முறை 12856 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்துக்கும் இரு ஆயுதம் தரித்த பொலிஸார் வீதம் பாதுகாப்பு வழங்கப்படும். இவ்வாறு பாதுகாப்பு வழங்கும் அனைவரும் ஆண் உத்தியோகத்தர்களாவர். தேர்ந்தெடுக்கப்பட்ட சில வாக்களிப்பு நிலையங்களில் மட்டும் ஒரு ஆண் பொலிஸ் உத்தியோகத்தரும் ஒரு பெண் பொலிஸ் உத்தியோகத்தரும் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். அதன்படி வாக்களிப்பு நிலையத்தின் பாதுகாப்புக்கு மட்டும் 25 ஆயிரத்து 712 பொலிஸார் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அனைத்து வக்களிப்பு நிலையங்களையும் கண்காணிக்கும் வண்ணம் 3043 ரோந்துக் குழுக்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. ஒரு குழுவில் ஒரு பொலிஸ் பரிசோதகர் தர அதிகாரியும் ஒரு சார்ஜன்ட் அல்லது கான்ஸ்டபிலும் இரு சிவில் பாதுகாப்பு படையினரும் உள்ளடங்கியிருப்பர். அதன்படி ரோந்துப் பணியில் 6086 பொலிஸாரும் சிவில் பாதுகாப்புப் படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். இதேவேளை, நாடளாவிய ரீதியில் 43 வாக்கெண்ணும் நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்தினதும் பாதுகாப்புக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் அல்லது பொலிஸ் அத்தியட்சர் ஒருவரின் நேரடி கட்டுப்பாட்டில் இருக்கும். ஒரு வாக்கெண்ணும் நிலையத்தில் 5 பொலிஸ் பரிசோதகர் தர அதிகாரிகள், 5 சார்ஜன்கள், 40 கான்ஸ்டபிள்கள் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்படுவர். அதன்படி வாக்கெண்ணும் நிலையங்களின் பாதுகாப்புக்கு மட்டும் மொத்தமாக 2193 பேர் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அத்துடன் நாடளாவிய ரீதியில் அவதானம் காணப்பட்டுள்ள இடங்களை மையப்படுத்தி 153 கலகத் தடுப்புக் குழுக்கள் நிலைகொள்ளச் செய்யப்பட்டுள்ளன. இதில் 54 குழுக்கள் பூரண கலகத் தடுப்புக் குழுக்களாகவும் 99 குழுக்கள் அரை கலகத் தடுப்பு குழுக்களாகவும் செயற்படும்.

பூரண கலகத் தடுப்பு குழுவொன்றில் ஒரு பொலிஸ் பரிசோதகர், ஒரு சார்ஜன்ட், 8 கான்ஸ்டபிள்கள் இருப்பர். அரை கலகத் தடுப்பு குழுவில் ஒரு பரிசோதகர், ஒரு சார்ஜன்ட் மற்றும் 5 கான்ஸ்டபிள்கள் இருப்பர். அதன்படி கலகத் தடுப்பு பணிகளில் மட்டும் 1233 பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர். தற்போது நாட்டில் 137 நிரந்தர வீதிச் சோதனை சாவடிகளை பொலிஸார் முன்னெடுத்து வரும் நிலையில், அவற்றுக்கு மேலதிகமாக புதிதாக 190 வீதிச் சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதன்படி வீதிச் சோதனை சாவடி கடமைகளில் மட்டும் 1688 பொலிஸாரும் 190 சிவில் பாதுகாப்பு படையினரும் கடமையாற்றவுள்ளனர்.

இதனைவிட பாதுகாப்பு மற்றும் ஏனைய கடமைகளில் இருக்கும் பொலிஸாரின் நலன்புரி நடவடிக்கைகளை கண்காணிக்க தனியான குழுவும் தேர்தல்கள் முறைப்பாடுகளைப் பெற, விசாரிக்க, நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க தனியான உத்தியோகத்தர்களும் உளவுத் தகவல்களை சேகரிக்க தனியான படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்– என்றார். (ஐ)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் அமைந்ததாக பொலிஸ் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

இதற்கிடையில், தேர்தல் பிரசாரங்கள் இல்லாத 48 மணித்தியால காலகட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு எதிராகத் துண்டுப் பிரசுரங்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஒருவர் கண்டியில் 5900 துண்டு பிரசுரங்களுடன் கைது செய்யப்பட்டார். மற்றவர் 3845 துண்டுப் பிரசுரங்களுடன் நேற்று மாதம்பேயில் கைது செய்யப்பட்டார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## இன்று மீளெழுச்சிக்கான தினம்

இந்த நாட்டின் எதிர்கால செல்நெறியை – தலைவிதியை – தீர்மானிக்கப் போகும் தினம் இன்று.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நாட்டின் தலைவர் பதவியில் இருந்து கொண்டு நாட்டையும் மக்களையும் வழி நடத்தப் போகின்றவர் யார், வழி நடத்தப் போகின்ற அணி எது என்பதை நாட்டு மக்கள் இன்றுதான் தீர்மானிக்கப் போகின்றார்கள்.

சத்தம், சந்தடியின்றி காகிதத்தில் பேனாவால் – அல்லது பென்ஸிலினால் – இன்று அவர்கள் போடப் போகின்ற புள்ளடியே நாடு எதிர்காலத்தில் சுபீட்சத்தை நோக்கி எட்டி நடை போடப் போகின்றதா அல்லது கடந்த காலத்தில் இந்த இலங்கைத் தீவையே பெரும் போராகப் புரட்டிப் போட்ட யுத்தம் போன்றவற்றுக்கு வழி செய்யப் போகின்றதா என்பதை முடிவு கட்டப் போகின்றது.

சத்தமின்றி, கத்தியின்றி, இரத்தமின்றி இன்று நடக்கும் யுத்தம்தான் ஜனநாயகத் தேர்தல். இந்த ஜனநாயகத் தேர்தல் போராட்டத்தில் பிரதான ஆயுதமே வாக்குச் சீட்டுத்தான்.

அது வன்முறைப் பலம் கொண்டதல்ல. அது அஹிம்சை வடிவானது; அற நெறிப்பட்டது; பல்வீனனும் பயன்படுத்தக் கூடிய ஆயுதம் அது. அதுவே அஹிம்சை ஆயுதம்.

பெரும் யுத்தங்கள், பல்லாயிரம் படையினர், பெருமளவு ஆயுதங்கள், எண்ணிக் கணக்கில் அடங்காத சுடுகலன்கள் போன்றவை சாதிக்க முடியாதவற்றை இந்த வாக்குச் சீட்டு என்ற அஹிம்சை ஆயுதம் இலகுவாகச் சாதித்து விடும். நினைத்துப் பார்க்கவே முடியாத அதிகார பலத்தை இருந்த இடமில்லாமல் நிர்மூலமாக்கிக் குதறி எறியும் அசகாய வல்லமை அந்த வாக்குச் சீட்டு என்ற விநோத வடிவத்துக்குள் நுட்பமாக – நுணுக்கமாக – பொதிக்கப்பட்டு உறைந்து கிடப்பதை நாம் உணர வேண்டும்.

அந்த அசுர பலத்தை அமைதியாக நாம் ஒவ்வொருவரும் கையாள வேண்டிய நாள் இன்றுதான்.

நேரத்துடன் வாக்களிப்பு நிலையத்துக்குப் போய் அந்த வரலாற்றுக் கடமையை நாம் நிறைவு செய்ய வேண்டும்.

நாம் விரும்பியோ, விரும்பாமலோ – நாம் இசைந்தோ, இசையாமலோ – நமக்கும் சேர்த்துத்தான் இந்த நாட்டின் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். அதில் நாம் பங்குபற்றாமல் தவிர்த்தால் யாரோ ஒரு தலைவர் தெரிவாகி நம்மையும் சேர்ந்து அவர் அதிகாரம் செலுத்தும் நிலைமை வந்து விடும்.

இந்தத் தேர்தலில் நாங்கள் ஒவ்வொருவரும் தவறாமல் வாக்களிப்பதன் மூலம் மீண்டும் மக்களாட்சியை – நாட்டின் ஜனநாயகத்தை – திரும்பவும் ஒரு தடவை நிலைநிறுத்துவதில் வெற்றி காண்போம். ஜனநாயகத்தை செழுமைப் படுத்தி மேம்படுத்துவோம்.

இந்த நாடு – இலங்கைத் தீவு – தேசிய ரீதியில் எடுக்கப் போகின்ற ஒரு தீர்மானத்தில் ஏதோ ஒரு வழியில் பங்காளிகளாகுவோம்.

இலங்கைத் தீவில், அரசியல் ரீதியான ஒத்திசைவுடன் கூடி, நாடு முன்னேறுவதற்கு ஓர் அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் விதத்தில் நாமும் தேசிய சக்திகளோடு இணைந்து செயற்படுவோம். அதற்கான மேலும் ஓர் அடையாளமாக நமது வாக்களிப்ப அமைய வேண்டும்.

பல்பரிமாண அரச ஒடுக்கு முறையின் ஒட்டு மொத்தப் பாதிப்பை பாரதூரமான விளைவுகளோடு நீண்ட நெடுங்காலம் எதிர் கொண்ட தமிழினம், இன்றைய அரசியல் தேவைகள், அழுத்தங்கள், கட்டாயங்கள் போன்றவற்றின் நிமித்தம் மீண்டும் ஒரு தடவை ஒரு தேசமாக எழுச்சி கொள்ள வேண்டியிருக்கின்றது.

2005 இல் அந்தக் காலகட்டத்தின் தேவை கருதி – கட்டாயம் கருதி – சூழல் கருதி – தேர்தலையும் வாக்களிப்பையும் புறக்கணித்த இலங்கைத் தமிழினம், இன்றைய நிலையில் அதற்கு மாறாக இந்த வாக்களிப்பைப் பயன்படுத்தி ஒரு தேசமாக வீறு கொண்டெழுந்து தன்னைத் தனித்துவமாக அடையாளம் காட்ட வேண்டியுள்ளது.

தமிழர் தேசத்தின் – தமிழ் மக்களின் – அரசியல் கருத்து நிலைப்பாட்டை ஒரே குரலில் ஒரு திண்ணியமான முறையில் வெளிப்படுத்துவதர்கான அருமையான சந்தர்ப்பமாக இது வாய்த்திருக்கின்றது.

ஒடுக்கப்பட்ட மக்களின் ஒன்றுபட்ட கூட்டுணர்வாகவும், அவர்களின் தேசிய விழிப்புணர்வின் எழுச்சிக் கோலமாகவும், இன்றைய வாக்களிப்பை ஒன்றுபட்ட முறையில் நாம் எதிர்கொள்ள வேண்டும்.

அது, ஒரு வரலாற்றுக் கடமையாக – சுதந்திரப் பொறுப்புணர்வாக – நம்மைத் தொட்டு நிற்கின்றது.

அதைச் செய்வதற்கு நாம் எல்லோரும் ஒன்றுபட்டுத் தயாராக வேண்டும்.

முப்பது வருட ஆயுதப் போராட்டத்தில் உலகமே வியந்து போற்றும் வகையில் அரிய – அதிஅற்புதமான – வெற்றிச் சாதனைகளை எல்லாம் சாதித்த தமிழினம், இன்று போர்த் தோல்வியின் பின்னர் அடங்கிக் கிடக்கின்றது.

தம்மிடம் எஞ்சியிருக்கும் ஜனநாயக வலிமையை – பலத்தை / ஒன்றுபட்டுக் காட்டி, ஒரே சக்தியாய் எழுந்து நிற்பதற்குத் தமிழருக்குக் கிடைத்த அருமையான வாய்ப்பு இது. நமது வாக்குச் சீட்டை தவறாமலும், சரியாகவும், ஒன்றுபட்டுப் பிரயோகிப்பதன் மூலமும் ஜனநாயக ரீதியில் மீளெழுச்சி கொள்வோம்.

# நான்கில் ஒருவருக்கு கொழும்பில் நீரிழிவு!

கொழும்பு, நவ. 16

கொழும்பின் மக்கள் தொகையில் 50 வயதிற்கு மேற்பட்டவர்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் ஒவ்வொரு பத்துப் பேரில் ஒருவர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என 2010 ஆம் ஆண்டு ஆய்வில் தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட சமீபத்திய ஆய்வில், கொழும்பின் வயது வந்தோரில் 18 சதவீதமானவர்களுக்கு நீரிழிவு நோய் இருப்பது தெரியவந்துள்ளது,

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மருத்துவத்தின் மூத்த விரிவுரையாளர் மற்றும் ஆலோசகர் உட்சுரப்பியல் நிபுணர் மற்றும் நீரிழிவு மருத்துவர் பிரசாத் கத்துலந்த நேற்று முன் தினம் இதனைத் தெரிவித்தார்.

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டுக் கொழும்பில் உள்ள சுகாதார மேம்பாட்டு பிரிவில் செய்தியாளர் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

உலக சுகாதார அமைப்பின் அனுசரணையில் சர்வதேச அளவில் இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.

கொழும்பில் நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலை இப்போது நகரத்தின் மக்கள் தொகையில் 24 சதவீதத்தை எட்டியுள்ளது என்று அவர் கூறினார். கொழும்பில் ஒவ்வொரு நான்கு பெரியவர்களில் ஒருவருக்கு நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலை உள்ளது. 2006 ஆம் ஆண்டில், இலங்கையில் நீரிழிவு நோய் 10 சதவீதமாக இருந்தது.

இலங்கையில் நீரிழிவு நோய் பரவுவது இப்போது 15 சதவீதம் அல்லது 20 சதவீதம் வரை அதிகரித்திருக்கலாம் என்று மருத்துவர் பிரசாத் சுட்டிக்காட்டினார்.

நீரிழிவு நோய் ஒரு தொற்றுநோய் போலாகி விட்டது. கடந்த காலத்தில் பெரியவர்கள் மட்டுமே நீரிழிவு காரணமாகச் சிக்கல்களை உருவாக்கினர். ஆனால் இப்போது உற்பத்தி வயதில் உள்ளவர்கள் சிக்கல்களை உருவாக்குகிறார்கள். இலங்கையில் நீரிழிவு நோய்க்கு ஆதிகாலத் தடுப்பு அவசியம் என்றார்.

உட்சுரப்பியல் நிபுணர் மற்றும் நீரிழிவு மருத்துவர் உதிதா புருகாஹபிட்டி கூறுகையில், ஆரம்ப மற்றும் சரியான சிகிச்சை மற்றும் ஆரம்பகால வாழ்க்கை முறை மாற்றங்களுடன் கண்டறியப்பட்டால், நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலைமைகளில் சுமார் 60 சதவீதம் தலைகீழாக மாறும். முறையாக சிகிச்சையளித்தால், நீரிழிவு காரணமாக உருவாகும் சிக்கல்களைத் தடுக்கலாம். குடும்ப வரலாறு, எடை / உடல் பருமன் அதிகமாக இருப்பது, செயலற்ற வாழ்க்கை முறையை வழிநடத்துவது, அதிக அளவு கொழுப்பு மற்றும் உயர் இரத்த அழுத்தம் இருப்பது நீரிழிவு நோய்க்கு வழிவகுக்கும்.

அவரது கூற்றுப்படி, நீரிழிவு நோயாளிகளில் 40 சதவீதம் அல்லது 50 சதவீதம் பேருக்கு மட்டுமே அறிகுறிகள் உள்ளன. கட்டுப்பாடற்ற நீரிழிவு ஊனமுற்றோர் மற்றும் குருட்டுத்தன்மைக்கு வழிவகுக்கும். ஒரு நபர் ஒரு காலை இழந்தால், அவர் சுமார் ஐந்து ஆண்டுகள் மட் டுமே வாழக் கூடும் என்று அவர் எச்சரித்தார். (ஐ)

# 25 ஆயிரம் பேர் கைது!

## 62 கோடி 50 லட்சம் ரூபா வருமானம்

கொழும்பு, நவ. 16

மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களைக் கைது செய்வதற்கு பொலிஸார் முன்னெடுத்த வேலைத்திட்டத்தின் பயனாகக் கடந்த நான்கு மாத காலத்துக்குள் 62 கோடியே 50 லட்சம் ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி இந்திக ஹபுகொட தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 05 ஆம் திகதி இந்த நடவடிக்கை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டதாகவும் தற்போதும் அது நடைமுறையில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விசேட நடவடிக்கையில் நேற்று முன் தினம் வரை 25 ஆயிரம் மதுபோதையில் வாகனம் செலுத்தி சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டபோது குறைந்த பட்சம் ஒருவரிடம் 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப் பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சுட்டிக்காட்டினார்.

இந்த நடவடிக்கை மிகவும் வெற்றிகர மாக முன்னெடுக்கப்படுவதால், தொடர்ந்தும் இதனை முன்னெடுத்துச் செல்ல தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரிப்பு



கொழும்பு, நவ. 16

டெங்கு நோய் பரவும் அபாயம் தற்பொழுது கூடுதலாக காணப்படுவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்குச் சுற்றுச்சூழலை துப்பரவாக வைத்துக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களிலே கூடுதலான நோயாளர்கள் பதிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல நாட்கள் தொடர்ந்து காய்ச்சல் இருக்குமாயின் உடனடியாக வைத்தியப் பரிசோதனையைமேற்கொள்ளுமாறு அவர் பொது மக்களை அறிவுறுத் தியுள்ளார். (ஐ)

# பிற்பகல் 2 மணிக்கு முன்னர் வாக்களிக்க முயற்சியுங்கள்

கொழும்பு, நவ. 16

ஜனாதிபதித் தேர்தலில் பிற்பகல் 2 மணிக்கு முன்னதாக வாக்களிக்க முயற்சிக்குமாறு வாக்காளர்களிடம் தேர்தல்கள் ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

வழமையான வாக்களிப்பு நேரத்தைவிட இம்முறை ஒரு மணித்தியாலம் அதிகமாக வழங்கப்பட்டுள்ளது.

வாக்குச்சீட்டின் அதிக நீளம் காரணமாக வாக்களிப்பதற்கு அதிக நேரம் எடுக்கும் என்பதால் தாமதமின்றி விரைந்து வாக்களிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ)




**நாளை**

17.11.2019
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம்: பஞ்சமி மாலை 05.40 வரை.
திதி : புனர்பூசம் மு.இ. 10.46 வரை.
இராகுகாலம் : 04.38 – 06.08
சுப நேரம் : 09.08 – 10.38

## அமைச்சர் ராஜிதவுக்கு எதிராக வழக்கு தாக்கல்

கொழும்பு, நவ. 16

அமைச்சர் ராஜித சேனாரத்ன வுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய் யப்பட்டுள்ளது.

கோட்டை நீதவான் நீதிமன்றில் சட்டத்தரணி ஜனஜித் டி சில்வாவினால் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள் ளது.

வெள்ளை வான் கடத்தல்கள் தொடர்பாக அமைச்சர் ராஜித சேனா ரத்ன அண்மையில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி இருந்தார்.

இதில் கடத்தல்களுக்காக வெள்ளை வானைச் செலுத்தினார் எனக் கூறப் படும் சாரதி ஒருவரும், கடத்தலுக்கு உள்ளான ஒருவரும் அதில் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில், கடத்தல்களுடன் தொடர்புடைய ஒருவர் தலைமறை வாக இருப்பதற்கு உதவியளித்தார் என அமைச்சர் ராஜித மீது குற்றம் சுமத்தி இந்த வழக்குத் தாக்கல் செய் யப்பட்டுள்ளது. (ஐ)

# காலை ஏழு மணிக்கு வாக்களிப்பு ஆரம்பம்

கொழும்பு, நவ. 16

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்க ளிப்பு நடவடிக்கைகள் இன்று காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளன.

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய இதனைத் தெரிவித்தார்.

இதற்கமைய வாக்காளர்கள் அனை வரும் சரியான ஆவணங்களுடன் வாக் குச் சாவடிகளுக்குச் சென்று உரிய நேரத்தில் தமது வாக்குகளைப் பதிவு செய்யுமாறு அவர் கோரிக்கை விடுத் துள்ளார்.

இம்முறை ஏற்றுக் கொள்ளப்பட்ட 20 அரசியல் கட்சிகள் மற்றும் 15 சுயேச்சைக் குழுக்களும் தேர்தலில் போட்டியிடுகின்றன.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க ஒரு கோடியே 59 இலட்சத்து 92 ஆயிரம் 96 பேர் தகுதி பெற்றுள் ளனர்.

அத்துடன், நாடளாவிய ரீதியில் 12 ஆயிரத்து 845 தேர்தல் மத்திய நிலை யங்களில் வாக்களிப்பு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

மாலை வாக்களிப்பு நிறைவடைந் ததும் வாக்கெண்ணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனத் தேர்தல் கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் நடவடிக்கைகளை முன் னிட்டு விசேட பாதுகாப்பு நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்காக 60 ஆயிரத்து 175 பொலிஸார் மற்றும் 8 ஆயிரத்து 80 சிவில் பாதுகாப்பு ஊழியர்கள் கடமை களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையி லேயே இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)

## 2 ஆயிரம் அரச அலுவலர்கள் வவுனியாவில் தேர்தல் கடமை

வவுனியா, நவ. 16

ஜனாதிபதித் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 11ஆயிரத்து 333 வாக்காளர்கள்கள் வாக்களிக்க உள்ளமையுடன் அவர்களிற்காக, 142 வாக்களிக்கும் நிலையங்கள் அமைக் கப்பட்டுள்ளன.

தேர்தல் கடமைகளுக்காக வவுனியா மாவட்டத்தில் 2000 அரச ஊழியர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் இதுவரை வவுனியா மாவட்டத்தில் 51 தேர்தல்முறைப்பாடுகள்பதிவாகியுள்ளன. பாதுகாப்பு கடமைகளுக்காக 800 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இன்று ஜனாதிபதித் தேர்தல் நடை பெறவுள்ள நிலையில் வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கோதுமை மா விலை உயர்வு

கொழும்பு, நவ. 16

கோதுமை மாவின் விலையை நேற்று நள்ளிரவு முதல் அதிகரித்துள்ளது பிறிமா நிறுவனம்.

இதன்படி 1 கிலோ கிராம் பிறிமா கோதுமை மாவின் விலையை 8 ரூபா 50 சதத்தால் அதிகரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## மடுல்சீமையில் 1 வயது குழந்தையை கைவிட்டுச் சென்ற குடும்பம் கைது!

கொழும்பு, நவ. 16

ஒரு வயது குழந்தையைப் பையொன்றில் போட்டுத் தோட்ட நிலத்தில் வைத்து விட்டு தலைமறைவான மூவ ரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மடுல்சீமை, மெட்டி ஹகத்தென பாடசாலைக்கு அண்மித்த பகுதியில் கடந்த 11ஆம் திகதி இந்தச் சம்பவம் நடந்தது.

ஒரு வயதும், ஒரு மாதமு மான பெண் சிசுவொன்றை துணிப்பையென்றில் வைத்து தோட்ட நிலத்தில் வைத்துள் ளனர். குழந்தை அழும் சத்தம் கேட்டதைத் தொடர்ந்து அருகிலுள்ள வீட்டிலிருந் தவர்கள் அங்கு சென்று பார்த்தபோது குழந்தை காணப்பட்டது.

குழந்தை வீட்டுக்கு எடுத்து வரப்பட்டு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு அவர்களி டம் ஒப்படைக்கப்பட்டது.

பொலிஸார் நடத்திய விசா ரணைகளை தொடர்ந்து நேற்று முன்தினம் குழந்தையின் பெற்றோரும், பேத்தியும் கைதானார்கள். 26 வயதுடைய தாய், 30 வயதான கணவன், 51 வயதான பெண்ணின் தாய் ஆகியோரே கைதாகினர். குடும்பத் தகராற்றினால் அந்த குழந்தையைக் கைவிடத் தீர் மானித்தனர் என அவர்கள் தெரிவித்தனர். (ஐ)

## ஒரு மணித்தியாலத்துக்குள் 200 பேரே வாக்களிக்கலாம்

கொழும்பு, நவ. 16

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஒரு மணித்தியாலத்தில், 200 வாக்குகளை மாத் திரமே அளிக்க முடியும் எனத் தேர்தல்கள் கண்காணிப்புச் சங்கம் தெரிவித் துள்ளன.

வாக்குச்சீட்டின் அதிக நீளம் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. வாக்காளர் ஒருவருக்கு வாக்களிக்க எடுக்கும் நேரத் தைக் கணிப்பிட்டு இது தொடர்பான தகவ லைத் தேர்தல்கள் கண்காணிப்புச் சங்கம் வெளியிட்டுள்ளது.

எனவே, இன்று முடிந்தளவு நேர காலத் துடன் சென்று வாக்களிப்பதே மிகவும் சிறந் தது என அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

வாக்குச்சீட்டின் அதிக நீளம் காரண மாக இம்முறை காலை 7 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை வாக்களிப்பு நீடிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சாதாரண தரப் பரீட்சை டிசம்பர் 2 இல் ஆரம்பம்!


கொழும்பு, நவ. 16

2019 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் டிசெம் பர் மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாக வுள்ளது.

பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 12ஆம் திகதி வரை இந்த பரீட்சை நடைபெற வுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை நான்காயிரத்து 987 பரீட்சை நிலையங்களில் கல்விப் பொது தராதர சாதாரண தரப்பரீட்சை நடை பெறவுள்ளதுடன், 7 லட்சத்து 17 ஆயி ரத்து 8 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். (ஐ)



# ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் மிக விரைவில் தேர்தல் நடத்தப்படுமாம்



ஸ்ரீநகர், நவ.16

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் விரைவில் தேர்தல் நடத்தப்படும் என்று துணை நிலை ஆளுநர் கிரிஷ் சந்திர முர்மு தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டு 2 யூனியன் பிரதேசங்களாக அம்மாநிலம் பிரிக்கப்பட்டது.

ஜம்மு காஷ்மீர் சட்ட சபையுடன் கூடிய யூனியன் பிரதேசமாக பிரிக்கப்பட்டது.

ஜம்மு காஷ்மீரின் துணை நிலை ஆளுநராக கடந்த 31 ஆம் தேதி கிரிஷ் சந்திர முர்மு பதவியேற்றுக்கொண்டார். சிறப்பு அந்தஸ்து ரத்தால் பதற்றம் நிலவி வந்த காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதிகளில் மெல்ல மெல்ல இயல்பு நிலை திரும்பி வருகிறது.

இந்த நிலையில், நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் கிரிஷ் சந்திர முர்மு அங்கு பேசியவை வருமாறு: –

ஜம்மு காஷ்மீர் சட்ட சபையுடன் கூடிய யூனியன் பிரதேசமாகும். எனவே, இங்கு விரைவில் தேர்தலுக்கான பணிகள் தொடங்கும். இங்கு தொடர்ந்து துணை நிலை ஆளுநர் ஆட்சி நீடிக்காது.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நமது யூனியன் பிரதேசத்தில் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள காவல்துறை தயாராக வேண்டும். தேர்தலின் போது காவல்துறையினர் பணி மிகவும் முக்கியமானதாக இருக்கும். – என்றார்.

# உள்ளாட்சித் தேர்தல்களுக்காக தமிழகத்தில் ஏற்பாடுகள் தீவிரம்

விரைவில் உள்ளாட்சித் தேர்தல் களை நடத்துவதற்காக தமிழகத்தில் ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

உள்ளாட்சித் தேர்தலில் பணியாற்றவுள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் பட்டியலை மாநிலத் தேர்தல் ஆணையத்திடம் சென்னை மாநகராட்சி வழங்கியுள்ளது.

தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்காக, தமிழகம் முழுவதும் 92,771 வாக்குச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளன.

சென்னையில் 5,200 வாக்குச்சாவடிகள் அமைக்கப்படுகின்றது. சென்னை மாநகராட்சிக்கு தேர்தல் நடத்தும் அதிகாரியாக மாநகராட்சி ஆணையர், உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகள் 37 பேர் மற்றும் தேர்தல் பணியாளர்கள் 40 ஆயிரம் பேர் கொண்ட பட்டியல் தயாரிக்கப்பட்டு மாநில தேர்தல் ஆணையத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

# நிமோனியாவால் சிசுக்கள் இறப்பு விகிதம்: உலகில் இரண்டாவது இடத்தில் இந்தியா!

நிமோனியாவால் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதத்தில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது என ஐ.நா. கூறி உள்ளது.

உலகளவில் ஒவ்வொரு 39 விநாடிக்கும் ஒரு குழந்தை நிமோனியாவால் உயிர் இழக்கிறது.

நிமோனியா, குணப்படுத்தக்கூடிய மற்றும் தடுக்கக்கூடிய நோயாக இருந்தும் 2018 ஆம் ஆண்டில் நிமோனியாவால் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் இறப்பு விகிதத்தில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது என்று ஐ.நா.வின் புதிய அறிக்கை கூறி உள்ளது.

இது குறித்து ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் (யுனிசெப்) தெரிவித்துள்ளவை வருமாறு:–

உலகளவில், நிமோனியாவால் கடந்த ஆண்டு ஐந்து வயதிற்குட்பட்ட 8 லட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிர் இழந்துள்ளனர். அதாவது 39 வினாடிக்கு ஒரு குழந்தை ஆகும். பெரும்பாலான இறப்புகள் இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே ஏற்பட்டு உள்ளன. மேலும் வாழ்க்கையின் முதல் மாதத்திற்குள் கிட்டத்தட்ட 153,000 குழந்தைகள் இறந்து உள்ளனர்.

நிமோனியாவால் குழந்தைகள் இறப்புகளில் அதிகம் பாதிக்கப்படுவது ஐந்து நாடுகளே ஆகும். நைஜீரியா (162,000), இந்தியா (127,000), பாகிஸ்தான் (58,000), கொங்கோ ஜனநாயக குடியரசு (40,000) மற்றும் எதியோப்பியா (32,000).

இந்த மறக்கப்பட்ட தொற்று நோய் இப்போது ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் 15 சதவீத இறப்புகளுக்கு காரணமாக உள்ளது. ஆயினும், உலகளாவிய தொற்று நோய் ஆராய்ச்சி செலவினங்களில் வெறும் 3 சதவீதம் மட்டுமே இந்த நோய்க்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

நிமோனியாவால் குழந்தைகள் இறப்புகளுக்கும், வறுமைக்கும் இடையிலான வலுவான தொடர்பு மறுக்க முடியாதது. சுத்தமான குடிதண்ணீருக்கான அணுகல் இல்லாமை, போதிய சுகாதாரப் பாதுகாப்பு இல்லாதமை, ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் உட்புற காற்று மாசுபாடு ஆகியவையே நோய் பாதிப்புக்கு முக்கிய காரணங்களாகும். நிமோனியா தொடர்பான இறப்புகளில் பாதி காற்று மாசுபாட்டுடன் தொடர்புடையது.

இந்த மறக்கப்பட்ட தொற்றுநோய் குறித்து எச்சரிக்கை எழுப்பியுள்ள யுனிசெவ் மற்றும் பிற சுகாதார மற்றும் குழந்தைகள் அமைப்புகள் உலகளாவிய நடவடிக்கைக்கான வேண்டுகோளைத் தொடங்கி உள்ளன. இதனை, ஜனவரி மாதம் ஸ்பெயினில் நடைபெறும் குழந்தைப் பருவ நிமோனியா குறித்த உலகளாவிய மன்றத்தில் உலகத் தலைவர்களிடம் எடுத்துரைக்கும் என கூறப்பட்டுள்ளது.

யுனிசெவ் நிர்வாக இயக்குநர் ஹென்றிட்டா போர் இது தொடபில் கூறியவை வருமாறு: –

ஒவ்வொரு நாளும் ஐந்து வயதிற்குட்பட்ட 2,200 குழந்தைகள் நிமோனியாவால் இறக்கின்றனர். இது குணப்படுத்தக்கூடிய மற்றும் பெரும்பாலும் தடுக்கக்கூடிய நோயாகும். இந்த நோய்க்கு எதிரான போராட்டத்திற்கு வலுவான உலகளாவிய அர்ப்பணிப்பு மற்றும் அதிகரித்த முதலீடுகள் முக்கியமானவை. குழந்தைகள் இருக்கும் இடத்தில் வழங்கப்படும் செலவு, குறைந்த பாதுகாப்பு, தடுப்பு மற்றும் சிகிச்சைமுறைகள் மூலம் மட்டுமே லட்சக்கணக்கான உயிர்களை நாம் உண்மையிலேயே காப்பாற்ற முடியும் . – எனக் கூறினார்.

# தண்டவாளத்தில் அமர்ந்து மது அருந்திய 4 மாணவர்களே ரயிலில் சிக்கி உயிரிழப்பு

## கோவைச் சம்பவம் குறித்து விவரம்



கோவை,நவ.16

கோவையில் ரயிலில் அடிபட்டு உயிரிழந்தவர்கள் நால்வருன் தனியார் என்ஜினீயரிங் கல்லூரி மாணவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

தண்டவாளத்தில் அமர்ந்து மது குடித்த போது ரயில் மோதி இந்த நால்வரும் உடல் துண்டாகி உயிரிழந்துள்ளனர்.

கோவை சூலூரில் உள்ள ஆர்.வி.எஸ். என்ஜினீயரிங் கல்லூரியில் கோவை மற்றும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் படித்து வருகிறார்கள். இதற்காக சூலூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் அறை எடுத்து தங்கியுள்ளனர். இதே கல்லூரியில் படித்த ராஜபாளையத்தை சேர்ந்த கருப்பசாமி, (வயது24), கவுதம் (23) ஆகியோர் நடந்து முடிந்த தேர்வில் தோல்வி அடைந்தனர். அந்தப் பாடத்தை மீண்டும் எழுதுவதற்காக (அரியர்ஸ்) கோவை வந்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலை சேர்ந்தவர் தீன் முகமது என்பவருடைய மகன் சித்திக் ராஜா (22), நிலக்கோட்டையைச் சேர்ந்த ராஜசேகர் (20) மற்றும் விஷ்வனேஷ் (22). இவர்களும் அந்த கல்லூரியில் என்ஜினீயரிங் படித்து வந்தனர். 5 பேரும் நண்பர்களாக பழகி வந்தனர்.

தேர்வு முடிந்ததும் மாணவர்கள் 5 பேரும் ராவத்தூர் முத்துகவுண்டன்புதூர் செல்லும் வழியில் உள்ள டாஸ்மாக் கடைக்குச் சென்று மது குடித்துள்ளனர். பின்னர் அறைக்குச் சென்றனர். அதன் பின்னரும் அவர்களுக்கு மது அருந்த வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

அப்போது இரவு 10 மணியை நெருங்கி விட்டது. இதனால் 5 பேரும் அங்குள்ள டாஸ்மாக் கடைக்குச் சென்றனர். கடையை மூடும் நேரமாகி விட்டதால் மதுப் போத்தல்களை வாங்கிக் கொண்டு புறப்பட்டனர்.

பின்னர் அவர்கள் சூலூர் அருகே உள்ள ராவத்தூர் முத்து கவுண்டன்புதூர் பகுதியில் தண்டவாளத்தில் அமர்ந்து மது குடித்துக்கொண்டு இருந்தனர். இதில் போதை தலைக்கேறியது. இரவு 10.45 மணியளவில் கேரள மாநிலம் ஆலப்புழாவில் இருந்து சென்னை செல்லும் ஆலப்புழா எக்ஸ்பிரஸ் ரயில் வந்தது.

மதுபோதையில் இருந்ததால் ரயில் வருவதை மாணவர்கள் கவனிக்கவில்லை. கண் இமைக்கும் நேரத்தில் அவர்கள் மீது ரயில் மோதியது. இதில் மாணவர்கள் சித்திக் ராஜா, ராஜசேகர், கருப்பசாமி, கவுதம் ஆகியோர் ரயில் சக்கரத்தில் சிக்கி உடல்துண்டாகி சம்பவ இடத்திலேயே பலியானார்கள். அவர்களது உடல்கள் துண்டாகி அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சிதறிக்கிடந்தன.

மாணவர் விஷ்வனேஷ் ரயில் வருவதைப் பார்த்ததும் அங்கிருந்து விலகிவிட்டார். இதனால் அவர் உயிர் தப்பினார். தனது கண்முன் சக மாணவர்கள் ரயில் மோதி இறந்ததைக் கண்டதும் விஷ்வனேஷ் கதறி அழுதார்.

ரயில் மோதி மாணவர்கள் பலியானமை குறித்து அக்கம்பக்கத்தினிடம் கூறி னார். இதுகுறித்து போத்தனூர் ரயில்வே பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் விரைந்து வந்து, பலியான 4 பேரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

# சிறையிலிருந்து பரோலில் வந்துள்ள பேரறிவாளனுக்கு டெங்குத் தொற்று?

ஜோலார்பேட்டை,நவ.16

சிறையிலிருந்து பரோலில் வெளியே வந்துள்ள பேரறிவாளனுக்கு டெங்கு அறிகுறி இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்ததையடுத்து அவரது இரத்தம் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி கடந்த 28 ஆண்டுகளாக பேரறிவாளன் வேலூர் ஜெயிலில் தண்டனை அனுபவித்து வருகிறார்.

உடல் நிலைப் பாதிப்புக்கு சிகிச்சை பெற வசதியாக புழல் சிறைக்கு அவர் மாற்றப்பட்டார். அவரது தந்தை குயில்தாசனுக்கு உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாகத் தெரிவித்து அற்புதம் மாள் குடும்பத்தினர் அளித்த கோரிக்கையை ஏற்று பேரறிவாளனுக்கு ஒரு மாதம் பரோல் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி பேரறிவாளன் பரோலில் வந்தார். ஜோலார்பேட்டையில் உள்ள அவரது வீட்டில் தங்கியுள்ளார்.

பேரறிவாளன் தங்கியுள்ள வீட்டைச் சுற்றிலும் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. டி.எஸ்.பி. தங்கவேல் மேற்பார்வையில் இன்ஸ்பெக்டர் பழனி தலைமையில் 2 சப் – இன்ஸ்பெக்டர்கள் உள்பட 35 பொலிஸார் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு பேரறிவாளனுக்கு காய்ச்சல் ஏற்பட்டது. நேற்றுக் காலையிலும் காய்ச்சல் அதிகரித்தது. இதனையடுத்து நாட்றம்பள்ளி அரசு ஆஸ்பத்திரி டாக்டர் திலீபன் ஜோலார்பேட்டையில் நடத்தி வரும் கிளினிக்கில் இருந்து டாக்டர்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் பேரறிவாளனுக்குக் காய்ச்சலுக்கான சிகிச்சை அளித்தனர்.

மேலும் அவருக்கு டெங்கு அறிகுறி இருப்பதாக கூறப்படுகிறது. இதனையடுத்து பேரறிவாளனின் இரத்தம் பரிசோதனைக்கு எடுக்கப்பட்டது.

இரத்தப் பரிசோதனை முடிவைப் பொறுத்து அவருக்கு சிகிச்சை மேற்கொள்ளப்படும் என டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

பேரறிவாளன் தந்தை குயில்தாசனுக்கும் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அவரை ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்று சிகிச்சை அளித்தனர். பின்னர் அவரை வீட்டுக்கு அழைத்து வந்தனர்.

பேரறிவாளன், அவரது தந்தை காய்ச்சலால் பாதிக்கப்பட்டமையை அறிந்த நகராட்சி அதிகாரிகள் அவரது வீட்டின் அருகே சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டனர்.

இதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை பேரறிவாளன் வீடு அமைந்துள்ள பகுதியில் முழு சுகாதாரப் பணிகள் செய்யப்பட்டன. அவரது வீட்டைச் சுற்றி பிளீச்சிங் பவுடர், நோய்த் தடுப்பு மருந்துகள் அடிக்கப்பட்டன.

அந்த பகுதியில் டெங்கு பாதிப்பு உள்ளதா என்பது குறித்து சுகாதாரத்துறை அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

# 3,000 ஆண்டுகள் பழைமையான கோவில் பெருவில் கண்டுபிடிப்பு!

பெருநாட்டின் கடலோர மாவட்டமான லாம்பேயிக்கியூ எனுமிடத்தில் 3,000 ஆண்டுகள் கால பழைமை வாய்ந்த ஆலயம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தொல்லியல்ஆய்வாளர்கள்இப்பகுதியில் ஆய்வு மேற்கொண்ட போது, பூமிக்கு அடியில் புதையுண்டு கிடந்த 21 கோபுரங்களுடன் கூடிய கோவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பண்டைய பெருவில் தண்ணீரைத் தெய்வமாக வணங்கிய சான்றுகளும் இந்த கோவிலுக்குள் கிடைத்துள்ளன. 131அடி நீளமும் 183 அடி அகலமும் கொண்ட இக்கோவிலில் வாள்போன்ற புராதனப் பொருள்களும் ஏராளமாகக் கிடைத்துள்ளன.

கலை நுட்பம் மிக்க கைவினை வல்லுனர்களான உஜுஷ்துற் இனத்தவரின் பண்பாட்டு அடையாளமாக இக்கோவில் விளங்குகிறது. அவர்கள் தண்ணீரை கடவுளாக கோவில் கட்டி வணங்கியுள்ளனர். இதே போல் சிந்தி இன மக்களும் ஜூலே லால் என்று கடல் தேவனை வணங்குவதும் மரபில் உள்ளது.



# 19 மணி நேரம் இடைவிடாமல் நீண்ட தூரம் பயணித்த விமானம்

லண்டன்,நவ.16




மிக நீண்ட தூரம் பயணிக்கும் இடைநில்லா பயணிகள் விமானத்தின் இரண்டாவது சோதனையை லண்டனிலிருந்து குவாண்டாஸ் விமான நிறுவனம் தொடங்கியது.

அதன்படி நேற்று முன்தினம் காலை 6 மணிக்கு குவாண்டாஸ் போயிங்787 - 9ரக விமானம் 50 பயணிகளுடன் லண்டனின் ஹீத்ரூ விமானநிலையத்திலிருந்து புறப்பட்டு சென்றது.

இந்த விமானம் இடையில் எங்கும் நிற்காமல் 19 மணி நேரத்தில் சுமார் 17,800 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து சிட்னி நகரை அடைந்தது.

பயணித்தின் போது, பயணிகள், விமானிகளின் உடலில் சுரக்கக்கூடிய மெலட்டோனின் என்ற தூக்கத்தை தூண்டும் ஹோர்மோன் அளவை மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்காணித்தனர்.

குவாண்டாஸ் நிறுவனம் இதுவரை பயணித்திராத வான்பரப்பில் இந்த விமானம் பயணித்தது.

# நிஜத்தில் சிவப்பு நிறத்தில் இரத்த ஆறு தென்கொரியாவில் ஓடியிருக்கின்றது!

சியோல்,நவ.16

தென்கொரியாவில் நிஜத்தில் இரத்த ஆறு சிவப்பு நிறத்தில் ஓடியிருக்கிறது.

ஆசிய நாடுகளில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு ஆபிரிக்கப் பன்றி காய்ச்சல் வேகமாகப் பரவியது.

ஆபிரிக்கப் பன்றிக்காய்ச்சல் விலங்குகளிடம் வேகமாகப் பரவக்கூடிய, குணப்படுத்த முடியாத நோயாகும். இந்த நோய்த் தாக்கிய பன்றிகளில் எதுவும்



உயிர் தப்புவதில்லை. ஆனால், இந்த நோய் மனிதர்களுக்கு ஆபத்தானது இல்லை.

இந்த நிலையில் தென்கொரியாவில் ஆபிரிக்கப் பன்றிக்காய்ச்சல் பரவுவதைத் தடுக்கும் முயற்சியாக சுமார் 47 ஆயிரம் பன்றிகளை அந்த நாட்டு அதிகாரிகள் ஒன்றாகக் கொன்று குவித்தனர். கொல்லப்பட்ட பன்றிகளின் உடல்களை வடகொரியாவில் எல்லையையொட்டி இருக்கும் இராணுவமயமாக்கப்பட்ட பகுதியில் ஓடும் இம்ஜின் ஆற்றுக்கு அருகில் புதைத்தனர்.

இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன் இம்ஜின் ஆற்றங்கரையோர பகுதிகளில் கனமழை கொட்டித்தீர்த்தது. இதனால் பன்றிகளின் உடல்கள் புதைக்கப்பட்ட பகுதிகளில் மழை நீரில் மணல் கரைந்து, பன்றிகளின் இரத்தம் வழிந்தோடி இம்ஜின் ஆற்றில் கலந்தது.

இதனால் ஆறு முழுவதும் சிவப்பாக மாறியுள்ளது. ஆற்றில் கலந்துள்ள இரத்தம் பிற விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் நோய் தொற்று ஏற்பட காரணமாக அமையும் என்று கவலை எழுந்துள்ளது. ஆனால் பன்றிகள் நோய் தொற்று நீக்கப்பட்ட பின்னர்தான் கொல்லப்பட்டன எனவும், எனவே மக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும் அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

ஆற்றில் மேலும் இரத்தம் கலக்காமல் இருக்க அவசர கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன எனவும் அவர்கள் கூறினர்.

# அரசியல் எதிரி ஜோ பிடெனை வீழ்த்த உக்ரனுடன் டிரம்ப் இரகசியப் பேரம்?

## மக்கள் பிரதிநிதிகள் அவையில் விசாரணை ஆரம்பம்




வொஷிங்டன்,நவ.16

உக்ரைனுடன் இரகசியப் பேரம் பேசினார் என எழுந்துள்ள குற்றச்சாட்டின் பேரில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மீது அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் அவையில் நடத்தப்பட்டு வரும் பதவி நீக்க விசாரணை நேரலையில் ஒளிபரப்பப்பட்டது.

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி டிரம்ப் மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து, ஜனநாயக கட்சியை சேர்ந்த முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பிடென் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், உக்ரைன் நாட்டில் ஜோ பிடென் மற்றும் அவரது மகன் ஹன்டார் நடத்தி வரும் தொழில் தொடர்பாக அவர்கள் மீது விசாரணை நடத்த வேண்டும், அப்படி செய்யவிட்டால் உங்கள் நாட்டுக்கான பயங்கரவாத தடுப்பு நிதி உதவியை நிறுத்தி விடுவேன் என்று கூறி அந்த நாட்டு அதிபர் விளாடிமிர் ஜெலென்ஸ்கிக்கு ஜனாதிபதி டிரம்ப் நெருக்கடி கொடுத்தார் என அண்மையில் தகவல் வெளியாகி அதிர்வலையை ஏற்படுத்தியது.

அதனைத் தொடர்ந்து, டிரம்ப் தனது பதவியைத் தவறாகப் பயன்படுத்தினார் எனவும், இன்னொரு நாட்டுடன் இரகசியப் பேரத்தில் ஈடுபட்டு தேச பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தினார் எனவும் குற்றம் சாட்டிய ஜனநாயகக் கட்சி எம்.பி.க்கள், இந்த விவகாரத்தில் டிரம்பைப் பதவி நீக்கம் செய்வதற்கான விசாரணையைத் தொடங்கினர்.

இந்த நிலையில் டிரம்ப் மீதான பதவி நீக்க விசாரணையின் நடவடிக்கைகள் தொலைக்காட்சியில் நேரலையாக ஒளிபரப்பப்படும் என ஜனநாயகக் கட்சி அண்மையில் அறிவித்தது. அதன்படி விசாரணையின் முதல் நேரலை ஒளிபரப்பு நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் மூத்த அமெரிக்க தூதர் ஜார்ஜ் கென்னட் ஆஜராகி சாட்சியம் அளித்தார்.

இந்த நிலையில் 2 ஆவது நாளாக நேற்றும் பதவி நீக்க விசாரணை நேரலையில் ஒளிபரப்பப்பட்டது. இந்த விசாரணையின் போது, உக்ரைனுக்கான அமெரிக்கத் தூதர் (பொறுப்பு) பில் டெய்லர் விசாரணை குழுவின் முன்பு ஆஜராகி சாட்சியம் அளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

உக்ரைனின் கியோவ் நகரில் உள்ள ஓர் ஹோட்டலில் இருந்து ஐரோப்பிய கூட்டமைப்புக்கான அமெரிக்க தூதர் கோர்டன் சோண்ட்லேண்ட், ஜனாதிபதி டிரம்புடன் தொலைபேசியில் பேசினார். இந்தத் தொலைபேசி உரையாடலை எனக்கு கீழ் பணிபுரியும் ஊழியர் ஒருவர் ஒட்டுகேட்டார்.

உரையாடலின்போது, ஜோபிடெனின் விசாரணை குறித்து டிரம்ப் விசாரித்தார் எனவும், அதற்கு உக்ரைன் அதிகாரிகளின் விசாரணையில் முன்னேற்றம் காணப்பட்டுவருவதாக கோர்டன் சோண்ட்லேண்ட் பதில் அளித்தார் எனவும் எனது ஊழியர் கூறினார்.

மேலும் தொலைபேசி உரையாடலுக்கு பின்



கோர்டன் சோண்ட்லேண்டுடன் பேச்சு கொடுத்த எனது ஊழியர் உக்ரைன் குறித்து டிரம்ப் என்ன நினைக்கிறார் என அவரிடம் கேள்வி எழுப்பினார். அதற்கு அவர் ஜோ பிடென் விசாரணையில் டிரம்ப் அதிக அக்கறை காட்டுகிறார் எனப் பதிலளித்தார்.

இதன் மூலம் ஜோ பிடென் மீதான விசாரணையை பகிரங்கமாக அறிவிக்க உக்ரைன் அதிபர் ஒப்புக்கொள்ளாவிட்டால், உக்ரைனுக்கான இராணுவ உதவியைத் தடுத்து நிறுத்துவதாக டிரம்ப் நிர்வாகம் அச்சுறுத்தியது என்பது புரிகிறது.

- இவ்வாறு அவர் கூறினார்.

விசாரணைக்கு பிறகு இது குறித்து பத்திரிகையாளர்கள் டிரம்பிடம் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் “இது பற்றி எனக்கு எதுவும் தெரியாது, முதல் முறையாக நான் அதைக் கேட்டேன்” என பதிலளித்தார்.

# பாகிஸ்தானில் மின்னல் தாக்கி 23 பேர் பலி: 30 பேர் படுகாயம்

மித்தி,நவ.16



பாகிஸ்தானில் ஏற்பட்ட தொடர் மழையின் போது மின்னல் தாக்கி, 23 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில், தார் பார்க்கர் மாவட்டத்தில் பரவலாக பெய்த மழையின் இடையே பயங்கர மின்னல் ஏற்பட்டது. மாவட்டத்தில் உள்ள மித்தி, சாச்சீ , ராம்சிங் சோதா ஆகிய கிராமங்களை அடுத்தடுத்து, பயங்கர இடி முழக்கத்துடன் மின்னல் தாக்கியது.

இதில் 10 பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்பட 23 பேர் உயிரிழந்தனர். 30 பேர் காயமடைந்தனர். நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடைகள், மின்னல் தாக்கியதில் உடல் கருகி இறந்தன.

**சபரிமலை ஸ்ரீஐயப்பனுடைய மண்டல விரதத்திற்கு விரத மாலையிடும் தினம் நாளையாகும். அந்தப் பின்புலத்தில் மூளாய், சுழிபுரம், சபரிஸ்ரீ ஐயப்பன் யாத்திரைக்குழுவின் குருஸ்வாமி தங்க. முகுந்தன் எழுதிய கருத்து இங்கு பிரசுரமாகின்றது.**



# ஐயப்ப விரதத்துக்குக் களங்கம் ஏற்படுத்தாது முறையாக விரதத்தை அனுஷ்டிப்பது நல்லது

சபரிமலை ஸ்ரீஜயப்பனுடைய மண்டல விரதத்தில் தேவையற்ற – நடைமுறையில் இல்லாத – விடயங்களை விடுத்து, பக்தி பூர்வமாக விரதத்தை அனைவரும் கைக்கொள்ள வேண்டும்.

நாளை 17.11.2019 ஞாயிற்றுக்கிழமை விரத மாலை அணிந்து 41 நாள்கள் மண்டலவிரதம் அனுட்டிப்போர் விரத விதிமுறைகளைச் சரியாகத் தெரிந்துகொண்டு பக்குவமாக ஐயப்பனைத் துதிக்க வேண்டும்.

இவ்விரதத்தில் குருஸ்வாமிகள் மற்றும் பழமலைக்காரர்களை விட கன்னிஸ்வாமிக்கே கூடிய பெருமை உண்டு!

இதை விடுத்து குருஸ்வாமிகளை ஐயப்பனை விட மேலானவராக வழிபட வேண்டிய கட்டாயம் இல்லை. குருஸ்வாமி ஐயப்பனுடைய விரதத்திற்கு வழிகாட்டுபவராக இருக்க வேண்டுமே அன்றி ஐயப்பனை விட உயர்வாகத் தன்னை ஒரு போதும் எண்ணத்திலும் நினைக்கக் கூடாது!

ஒரு சில குருஸ்வாமிகளின் தவறான வழிகாட்டுதல்களே இன்று நாம் ஐயப்பனை வழிபடச் செல்லும் சபரிமலையில் பல இடையூறுகளை ஏற்படுத்துகின்றன.

அமைதியாக இருப்பதால் இவர்களுடைய தப்பான நடைமுறைகள் அதிகரித்துக்கொண்டு போவதால் இம்முறை பகிரங்கமாகவே ஒரு சில குருஸ்வாமிகளுக்கு அவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இலங்கையில் நான் அறிந்தவரை 3 குருஸ்வாமிகளுக்கு இதனை நான் தனித்தனியாக குறிப்பிட்டு அவற்றைஅவர்களுக்கு அனுப்புகின்றேன்.

1. ரவிகுருஸ்வாமி – எனது குரு – முதல் முதல் மாலை அணிவித்தது மட்டுமல்ல பல தடவைகள் அவரிடமே நான் மாலையணிந்து அவரது குழுவினருடன் சபரிமலைக்குச் சென்றிருக்கின்றேன். முதன் முதல் பம்பைக்கரையில் ஜோதியைப் பார்த்தும் அவரிடத்தில் வீழ்ந்து வணங்கி உயிருள்ளவரை ஐயனைத் தரிசிக்க வருவேன் என சபதமெடுத்தேன்! அதன் பின் நாம் தனியாகச் சென்றாலும் அவரது பூஜைகளிலும் அவர் செல்லும் பல ஏனைய குழுக்களின் வழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டிருக்கின்றேன். எமது பூஜைகளுக்கு அவரை அழைப்பித்திருக்கின்றேன். அவர் வரும் நேரங்களில் எல்லாம் அவரைப் போய்ப் பார்த்திருக்கின்றேன். கடந்த வருடம் அவருடைய ஒரு பூஜையில் கலந்துகொண்டபோது அவருக்கு சிரசில் அபிகேம் செய்த போது நான் எந்தவிதமான குழப்பத்தையும் விளைவிக்காமல் அமைதியைக் கடைப்பிடித்தேன். ஆனால் குரு வழிபாடு திருவடிக்கு மட்டுமே!

நான் 1985களிலிருந்து அமெரிக்கத் துறவியும் யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளுடைய சீடனுமாகிய ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் ஆச்சிரமத்தில் பணிபுரிந்த காலத்திலும் சரி, இன்றும் சரி, திருவடி வழிபாட்டையே மேற்கொள்கின்றோம்.

ஆலயங்களில் தீர்த்தத் திருவிழா அன்று மாத்திரம் அஸ்திர தேவருடன் ஐயாவும் உபயகாரரும் தீர்த்தமாடுவது வழமை. அதிலும் இறுதியில் மட்டும் முழுத் தீர்த்தமுமே தலையில் தெளிப்பதுண்டு! அரிசி மா முதல் பன்னீர் வரை ஆண்டவனுக்கு மட்டுமே சிரசில் அபிகேக்க முடியும். உயிர் பிரிந்த பிறகு மாத்திரமே உயிரற்ற உடலுக்கு அபிகேம் நடைபெறுவது வழமை! பாத பூஜை மட்டுமே சபரிமலை விரத காலங்களில் ஸ்வாமிமாருக்கு உரியது. தலையில் அபிடேகம் செய்ய வேண்டும் என்ற நியதி கிடையாது!

2. கோண்டாவில் ஐயப்பன் கோவிலில் ஐயப்பனுடைய விக்கிரகத்தைத் தன் மடியில் தான் வைத்திருக்க, ஐயாவுடைய சிரசில் எல்லாவகையான அபிடேகப் பொருள்களையும் ஊற்றி அவரது தலையிலிருந்து தாடியால் வழியும் நிர்மாலியப் பொருள்களே சாட்சாத் ஐயப்பனுடைய சிரசில் விழுவதும் மன்னிக்க முடியாத குற்றம்! விரும்பினால் ஐயாதன் சிரசில் ஐயப்பனை வைத்து அவருக்கு அபிடேகிக்கும் அபிடேகத் திரவியங்கள் பின்னர் அவருடைய உடலில் படுவதை ஏற்றுக்கொள்ளலாம்!

3.ருவன்வெல்லையிலும் ஒரு குருஸ்வாமிக்கு சிரசில் அபிடேகம் செய்வதை அவரது ஒரு சீடர் என்னைத் தன் வீட்டுப் பூஜைக்கு அழைத்திருந்த போதும், குறித்த நிகழ்வுக்கு என்னை வர வேண்டாம் எனக் கூறி தனது இல்லத்தில் என்னை இருத்தி விட்டுத் தான் அந்தப் பூஜைக்குச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

சுவிற்சர்லாந்தில் நான் இருந்தவேளையில், 2007 – 2010 காலப்பகுதியில் ஒரு அந்தண குருஸ்வாமி வயது வேறுபாடின்றி அனைவருக்கும் மாலை அணிவித்து அங்கேயே பாத நடையாக இரு முடிச்சு மந்து ஐயப்பனுக்கு நெய்யபிகேம் செய்வதும் வழமை! மேலும் சக்தி பூஜை முடிந்த பின் நாமெல்லாரும் தலையில் சுமந்து கொண்டாடும் எச்சில் இலையை, நிலத்தில் போட்டு விட்டு,



அதன் மேல் பெண்கள் ஆண்கள் என எல்லா சுவாமிகளையும் அதிலே போட்டு உருட்டி எடுப்பதையும் எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது!

கொழும்பில் ஐயப்பன் கோவிலில் சபரிமலை முறையிலில்லலாத வழக்கம் – மாளிகை புறத்து அம்மனை ஐயப்பனுக்கு அருகில் வைத்து பிரதிட்டை செய்து வழிபாடு செய்வதுடன், வயதுக்கு வந்த பெண்களை அந்த சந்நிதானத்தில் வைத்து மாதாந்தம் திருவிளக்கு வழிபாடு செய்வதும் வழக்கம்.

சபரிமலையிலில்லாத சில நடைமுறைகளை இங்கேயும் இந்தியாவுக்கு வெளியேயும் நாம் நடைமுறைப்படுத்துகின்றமையால் குணங்களுக்கு அப்பாற்பட்ட கடவுளின் விடயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியது போல, தற்போது பிரச்சினைக்குரிய பெண்கள் சபரிமலை வழிபாட்டை பண்ணலாம் என்பது நடக்கிறதோ என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டுள்ளது. காலாதிகாலமாக பின்பற்றப்பட்டு வந்த நடைமுறை இப்படியான முறைகளால் தற்போது பிரச்சனைக்குரியவை ஆகுவதுடன் கடவுள் நம்பிக்கையற்ற பலருடைய பரிகாசத்திற்கும் உட்படுவது வேதனையைத் தருகிறது.

புல தடவைகள் இவை பற்றிஎ முதியிருந்தாலும் கடந்த 2018ஆம் ஆண்டில் நடைபெற்ற சில சம்பவங்களால் இதனை அனைவருக்கும் தெரியப்படுத்த விரும்புகின்றேன்! அஞ்ஞானத்தை அகற்றி மெய்ஞ்ஞானத்தை அளித்து ஐயன் அவர்களனைவரையும் சரியான பாதையில் வழிநடத்த குருவின் குருவான ஸ்ரீ தர்மஸாஸ்தாவின் பாதம்பணிந்து அதனை நிறைவு செய்கின்றேன்!

**ஓம் குருவின் குருவே சரணம் ஐயப்பா!**
**பாபமெல்லாம் அழிப்பவரே சரணம் ஐயப்பா!**



# வாக்களிப்பு நிலையங்களுக்கு நேற்று வாக்குப் பெட்டிகள் அனுப்பி வைப்பு!






யாழ்ப்பாணம், நவ. 16

இன்று இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு வாக்குப்பெட்டிகள் அனைத்தும் வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான வாக்குப்பெட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வளாகத்திலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அத்துடன், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவடங்களிலும் பொலிஸ் பாதுகாப்புடன் வாக்குப் பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

அம்பாறை ஹாடி உயர் தொழிநுட்ப வளாகத்தில் இருந்து வாக்குப்பெட்டிகள் பொலிஸ் பாதுகாப்புடன் வாக்களிப்பு நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் சம்மாந்துறை கல்முனை திகாமடுல்ல ஆகிய தேர்தல் தொகுதிகளில் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

வாக்குப் பெட்டிகள் உரிய வாக்கெடுப்பு நிலையங்களை சென்றடைந்தது முதல் பொலிஸ் நடமாடும் சேவை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. (ஐ - 07)



# மட்டக்களப்பில் கின்னஸ் சாதனை!




மட்டக்களப்பு, நவ. 16

மட்டக்களப்பைச் சேர்ந்த இளங்கோவன் மதனன் 118 மூலகங்களைக் கொண்ட ஆவர்த்தன அட்டவணையை இரண்டு நிமிடம் 41 செக்கன்களில் வரிசைக் கிரமமாக அடுக்கி கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த ஒருவர் இந்தச் சாதனையை இரண்டு நிமிடம் 49 செக்கன்களில் செய்த கின்னஸ் சாதனையை 8 செக்கன்களால் முறியடித்து மதனன் சாதனை படைத்துள்ளார்.

இப்போட்டிக்கு நடுவர்களாக மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி. சரவணபவன், மாநகர பிரதி ஆணையாளர் உ.சிவராஜா, மட்டக்களப்பு ஆயுர்வேத வைத்திய அலுவலர் பிரதீபா பார்த்தீபன், உடற்கல்வி ஆசிரியர்களான டானியல் கஸ்ரோன், ஜி. கிருஸ்ண ராஜாஜீ, பி.பத்மகுமார், சங்கீத ஆசிரியர் ரி.மதனகுமார், ஆகியோர் கடமையாற்றினர். (ஐ)



# மீனவர் வலையில் சிக்கிய ரூ.1 கோடி பாரை மீன்கள்!

கொழும்பு, நவ. 16

ஒலுவில் கடற்கரை வெளிச்சவீட்டுப் பிரதேசத்தில் கரைவலை மீன் பிடியில் ஈடுபட்ட கியாஸ் என்பவரின் வலையில் 3000க்கு மேற்பட்ட பாரை மீன்கள் பிடிபட்டன. மீன்களைப் பார்வையிடச் சென்ற பொது மக்களுக்கும் மீன்கள் இலவசமாக வழங்கப்பட்டன .

ஒலுவில் வெளிச்ச வீட்டு கடற்கரையில் கடந்த புதன்கிழமை மாலை இந்த மீன்கள் பிடிபட்டதன் மூலம் ஒலுவில் பிரதேசமெங்கும் பாரை மீன்கள் மலிவான விலைக்கு விற்கப்பட்டன.

8 – 9 கிலோவுக்கு இடைப்பட்ட வெள்ளைக் கருங்கண்ணி பாரை மீன் சுமார் 3500 ரூபா விலைபோனது. இதனால் பொதுமக்கள் மலிவான விலையில் மீனைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்ததுடன், ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்டதற்கு பின்னர் பல வருடங்களுக்குப் பிறகு இப்படி மீன்கள் பிடிபட்டுள்ளன. இதன் மூலம் சுமார் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் வருமானம் கிட்டியுள்ளதையிட்டு மீனவர்களும் ஒலுவில் பிரதேச பொது மக்களும் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (ஐ)






# 2200 கண்காணிப்பாளர்களை களமிறக்கியது கபே அமைப்பு

கொழும்பு, நவ. 16

ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில், தேர்தலுக்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தத் தேர்தல் சுமுகமான முறையில் நடப்பதற்கு உள்ளூர் மற்றும் சர்வதேசக் கண்காணிப்பாளர்களும் தமது பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

இதனிடையே, ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு கபே அமைப்பு நாடளாவிய ரீதியில் நடமாடும் கண்காணிப்பாளர்களை நியமித்துள்ளது. இது தொடர்பான விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வகையில், வடக்கில் 425 கண்காணிப்பாளர்களையும், கிழக்கில் 350 கண்காணிப்பாளர்களையும் நியமித்துள்ளது.

மேலும், ஊவாவில் 220, மத்திய மாகாணம் 280, சப்ரகமுவ 205, வடமத்தி 200, வடமேற்கு 220 மற்றும் மேல் மாகாணத்தில் 300 பேர் என மொத்தமாக 2200 நடமாடும் கண்காணிப்பாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். (ஐ)

# தேசிய அணிகளில் பிரகாசிக்கும் ஹென்றியரசர் கல்லூரி வீரர்கள்









அகில இலங்கை தேசிய மட்ட 12 வயது மற்றும் 19 வயதிற்குட்பட்ட ஜுனியர் உதைபந்தாட்ட அணிகளில் யாழ்.இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வீரர்களான பாக்கியநாதன் டேவிட் டாலுங்சன், பாக்கியநாதன் றெக்சன், மரியநேசன் பிரசாந்த் மற்றும் சதுர்சன் ஆகிய வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

ஸ்பெயினின் 'பார்சிலோனா' கழகத்தில் இடம் பெற்ற மைலோ நிறுவனத்தின் 12 வயதிற்குட்பட்ட உலக மைலோ தொடருக்கான இலங்கை அணிக்கு பாக்கியநாதன் டேவிட் டாலுங்சன் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இதில் தெரிவு செய்யப்பட்ட 6 வீரர்களில் வடக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு தமிழ் வீரர் இவராவார்.

அதேவேளை பாக்கியநாதன் றெக்சன் மற்றும் மரியநேசன் பிரசாந் ஆகியோர் 19 வயதிற்குட்பட்ட தெற்காசிய உதைபந்தாட்டத் தொடர், ஆசிய தகுதி காண் தொடர் மற்றும் ஆசிய பாடசாலைகளுக்கிடையிலான தொடர் என்பவற்றுக்காக இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியில் மூன்று வீரர்கள் இடம்பெற்றிருந்தனர்.

அதில் அவர்கள் இருவரும் நேபாளத்தில் இடம்பெற்ற தெற்காசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் 19 வயதிற்குட்பட்ட தொடரிலும் மலேசியா சென்றிருந்த அணியிலும் இடம்பெற்றிருந்ததுடன் கட்டாரில் இடம்பெற்ற 2020ஆம் ஆண்டிற்கான 19 வயதிற்குட்பட்ட ஆசிய தகுதிகாண் போட்டிகளிலும் பக்குபற்றியிருந்தனர்.

இதில் முதலில் ஆடும் பதினொருவர் அணியிலும் இவ்விரு வீரர்களும் இடம்பெற்றிருந்தனர்.

47ஆவது ஆசிய பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சம்பியன்சிப் போட்டிக்காக இந்தோனேசியா செல்லும் இலங்கை 19 வயதிற்குட்பட்ட உதைபந்தாட்ட அணியில் மு.சதுர்சனும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவ்வருடம் இடம்பெற்ற தேசிய அளவிலான 19 வயது தேசிய அணி வீரர்களின் எண்ணிக்கையில் கொழும்பு சாஹிரா கல்லூரிக்கு அடுத்தபடியாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வீரர்கள் அதிகம் இடம்பெற்றுள்ளமை சிறப்பாகும்.

# ராஜஸ்தான் அணியிலிருந்து டெல்லிக்கு மாறிய ரஹானே

2020ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடர் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடைபெறவுள்ளன. இந்த நிலையில், அடுத்த வருட ஐ.பி.எல். தொடருக்கான ஐ.பி.எல். ஏலம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி, கொல்கத்தாவில் நடைபெறவுள்ளது.

2021ஆம் ஐ.பி.எல். ஏலத்தில் அனைத்து அணிகளும் 5 வீரர்களை மட்டும் தக்கவைத்துக்கொண்டு இதர வீரர்களை ஏலத்தில் மட்டுமே தேர்வு செய்யமுடியும். இதனால் இந்த வருட ஐ.பி.எல். ஏலம் முக்கியத்துவம் பெறுகிறது.

அடுத்த வருடப் பெரிய ஏலத்தை மனத்தில் கொண்டு இந்த வருட ஏலத்தில் வீரர்களை அணிகள் தேர்வு செய்யவுள்ளன.

இந்த நிலையில், கடந்த 9 வருடங்களாக ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக விளையாடி வந்த முன்னணி துடுப்பாட்ட வீரரான அஜிங்கியா ரஹானே, டெல்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு மாறியுள்ளார்.

கடந்த 2011ஆம் ஆண்டு ராஜஸ்தான் றோயல்ஸ் அணியில் இணைந்த அஜிங்கியா ரஹானே, 2018ஆம் ஆண்டு ராஜஸ்தான் றோயல்ஸ் அணி இரண்டு ஆண்டுகள் தடையில் இருந்து மீண்டு வந்த போது அணியின் தலைவராக அறிவிக்கப்பட்டார். அந்த சீசனில் ராஜஸ்தான் அணி பிளே ஒவ் சுற்றுக்கு முன்னேறியது.

அதன் பின் 2019ஆம் ஆண்டு ரஹானே தலைமையில் விளையாடிய ராஜஸ்தான் அணி தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து துவண்டது.

இவரது தலைமையில் 8 போட்டிகளில் 2 போட்டிகளில் மட்டுமே ராஜஸ்தான் றோயல்ஸ் வெற்றி பெற்றிருந்தது. அணியில் ஸ்டீவ் ஸ்மித், ஜோப்ரா ஆர்ச்சர் என சிறந்த வீரர்கள் இருந்த போதும் அந்த அணியால் வெற்றிகளை குவிக்க முடியவில்லை.

இதனால், ரஹானேவை அணித்தலைவர் பதவியில் இருந்து நீக்கி விட்டு, ஸ்டீவ் ஸ்மித்தை அணித்தலைவராக ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி அறிவித்தது.

எனினும், அணித்தலைவர் பதவி பறிபோனாலும் அணியில் இடம் பெற்ற ரஹானே, அதிரடியாக துடுப்பெடுத்தாடி இரண்டாவது ஐ.பி.எல் சதத்தை அடித்தார். அத்தோடு கடந்த 2019ஆம் ஆண்டு சீசனில் 14 போட்டிகளில் விளையாடி 393 ஓட்டங்களை குவித்தார்.

எனினும், அணித்தலைவர் பதவியிலிருந்து நீக்கியதால் கடும் அதிருப்தியில் இருந்த ரஹானேவை, தற்போது மயங்க் மார்கண்டே, ராகுல் டெவாடியா ஆகிய இரு வீரர்களை கொடுத்து, டெல்லி வாங்கியுள்ளது. ரஹானே நான்கு கோடி ரூபாய் ஏலத்தில் எடுக்கப்பட்டவர் ஆவார்.

ரஹானே இதுவரை 140 ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடி 3820 ஓட்டங்களை குவித்துள்ளார். இதில் 27 அரைசதங்கள், இரண்டு சதங்கள் அடங்கும்.

இதில், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக 2011ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 100 ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடி 2810 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

இதேபோல, ராஜஸ்தான் றோயல்ஸ் அணியில் கடந்த ஐ.பி.எல். போட்டித் தொடரில் இருந்த மும்பை வேகப்பந்து வீச்சாளர் தவல் குல்கர்னி, மீண்டும் தன் தாய் வீடான மும்பை இந்தியன்ஸ் அணிக்குத் திரும்புகிறார்.

ஐ.பி.எல். தொடங்கிய 2008ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரை மும்பை இந்தியன்ஸ் அணிக்கு விளையாடிய தவல் குல்கர்னி, 33 போட்டிகளில் 36 விக்கெட்டுகளை மும்பை இந்தியன்ஸ் அணிக்காக வீழ்த்தியுள்ளார்.

இவர் இன்னும் 100 ஐ.பி.எல். போட்டிகளில் என்ற மைல்கல்லை எட்ட இன்னும் 10 போட்டிகள் மீதமுள்ளன, அதே போல் 100 ஐ.பி.எல். விக்கெட்டுகளுக்கு இன்னும் 14 விக்கெட்டுகளே தேவையாகவுள்ளது.

ரஹானேவின் வருகையின் மூலம் டெல்லியின் அணியின் துடுப்பாட்டம் மேலும் வலுவடையவுள்ளது. ஏற்கனவே அந்த அணியில் தவான், ஸ்ரேயர்ஸ் அய்யர், ரிஷப் பந்த், ஹனுமா விஹாரி ஆகியோர் உள்ளனர்.



அடுத்த ஆண்டு ஆஸ்திரேலியாவில் ரி – 20 உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளதால், எதிர்வரும் ஐ.பி.எல். தொடர் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகின்றது.

கடந்த 12ஆவது ஐ.பி.எல் தொடருக்கான ஏலத்தில் தமிழக வீரர் வருண் சக்கரவர்த்தியை 8.40 கோடி ரூபாவுக்கு கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி எடுத்தது. அதேவிலைக்கு, ஜெய்தேவ் உனத்கட்டை ராஜஸ்தான் றோயல்ஸ் அணி ஏலத்தில் எடுத்தது.

இவர்கள் இருவரும் தான், கடந்த ஐ.பி.எல். ஏலத்தில் அதிக விலை போனவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள 12 ஐ.பி.எல். தொடர்களில், டெல்லி கப்பிடல்ஸ் அணி, கிங்ஸ் லெவன் பஞ்சாப் மற்றும் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் ஆகிய அணிகள் சம்பியன் பட்டத்தை வென்றமை கிடையாது.

ராஜஸ்தான் றோயல்ஸ், டெக்கன் சார்ஜஸ் மற்றும் சன்ரைசஸ் ஹைதராபாத் அணிகள் தலா ஒருமுறையும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மூன்று முறையும், கொல்கத்தா அணி இரண்டு முறையும், மும்பை இந்தியன்ஸ் அணி நான்கு முறையும் சம்பியன் பட்டங்களை வென்றுள்ளன.

# ஜோகோவிச்சை வீழ்த்தினார் ரோஜர் பெடரர்!

ரென்னிஸ் வீரர்களுக்கு மிக முக்கியமான தொடராக பார்க்கப்படும் ஏ.டி.பி பைனல்ஸ் தொடர் தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது.

தரவரிசையில் முதல் எட்டு இடங்களில் மட்டும் உள்ள வீரர்கள் பங்கேற்கும் இந்தத் தொடரில், இரண்டு குழுக்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

இதில் ஆண்ட்ரே அகாஸி குழுவில், ரபேல் நடால், டேனில் மெட்வேடவ், ஸ்டெபீனோஸ் ஸிட்ஸிபாஸ், அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், ஆகிய வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

பிஜொன் போர்க் குழுவில், நோவக் ஜோகோவிச், ரோஜர் பெடரர், டோமினிக் தியேம், மெட்டியோ பெரிட்டினி ஆகிய வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

இத்தொடரில் தற்போது குழுநிலைப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் நேற்று முன் தினம் நடைபெற்ற முக்கிய போட்டியொன்றின் முடிவைத் தற்போது பார்க்கலாம்,

பிஜொன் போர்க் குழுவில் நடைபெற்ற போட்டியொன்றில், உலகின் இரண்டாம் நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், உலகின் மூன்றாம் நிலை வீரரான சுவிஸ்லாந்தின் ரோஜர் பெடரரும் பலப்பரீட்சை நடத்தினர்.

இரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை எகிற வைத்த இப்போட்டியில், முதல் செட்டே விறுவிறுப்பாக நகர்ந்தது.

இந்த செற்றில் ரோஜர் பெடரர், கடுமையாக போராடி செற்றை 6 – 4 என கைப்பற்றி முன்னிலைப் பெற்றார்.




தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செற்றில், நோவக் ஜோகோவிச், ரோஜர் பெடரருக்கு நெருக்கடி கொடுப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும். அந்த எதிர்பார்ப்புக்களை தவிடு பொடியாக்கிய ரோஜர் பெடரர், செற்றை 6 – 3 என கைப்பற்றி வெற்றி பெற்றார்.

## சுற்றுலா மேம்பாட்டுப் பணியக தலைவர் நேற்று பதவி விலகல்

கொழும்பு, நவ. 16

இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தின் தலைவர் கிஷு கோமஸ் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்படவுள்ள நிலையில் அவருக்குப் புதிய நியமனங்களை வழங்க வழியை ஏற்படுத்துவதற்கு இடமளித்து தாம் இந்தப் பதவியை இராஜினாமா செய்கிறார் என கோமஸ் தெரிவித்துள்ளார். (ஐ)

## உப்பின் விலை உயர்வு

கொழும்பு, நவ. 16

புத்தளத்தில் உப்புச் செய்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

உப்புச் செய்கை மேற்கொள்ளப்படும் வயல்களில் வெள்ள நீர் புகுந்துள்ளமை, நீரில் உப்புத்தன்மை குறைவடைந்துள்ளமை போன்ற காரணங்களினால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பாதிப்பு காரணமாக உப்பின் விலை அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், உப்பு உற்பத்தியாளர்கள் கடும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## தேர்தலின் முதல் முடிவு இன்று நள்ளிரவு முதல்

கொழும்பு, நவ. 16

ஜனாதிபதித் தேர்தலின் முதல் முடிவு இன்று நள்ளிரவு 12 மணியளவில் வெளியிடப்படுமெனத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தலின் உத்தியோகபூர்வ இறுதி அறிவிப்பு 18 ஆம் திகதி பிற்பகல் அளவில் வெளியிடப்படுமென அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, மாத்தறை ,புத்தளம் , இரத்தினபுரி மாவட்டங்களில் கூடுதலான வாக்காளர்கள் உள்ள தொகுதிகளில் மூன்று வரிசைகளை வாக்களிப்பு நிலையங்களில் ஏற்படுத்த தேர்தல் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. (ஐ)

# வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் 266 பேர் கண்காணிப்புப் பணிகளில்!

கொழும்பு, நவ. 16

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் 266 வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் ஈடுபட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய நாடுகள் உள்ளிட்ட நாடுகளில் இருந்து கண்காணிப்பாளர்கள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இருந்து 80 கண்காணிப்பாளர்களும், பொதுநலவாய நாடுகளில் இருந்து 135 கண்காணிப்பாளர்களும் ஆசிய தேர்தல் வலையமைப்பில் இருந்து 35 கண்காணிப்பாளர்கள் உள்ளடங்களாக 250 பேர் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அத்துடன் இந்தியா, மாலைதீவு, இந்தோனேசியா, தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், பூட்டான் ஆகிய நாடுகளில் இருந்து 16 கண்காணிப்பாளர்களும் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகப்பூர்வ அழைப்பின் பேரில் இவர்கள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ.தே.க. உறுப்பினரின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, நவ. 16

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த சிசிர குமார அபேசேகரவின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

பிணை நிபந்தனையை மீறிய குற்றச்சாட்டின் பேரில், சாந்த சிசிர குமார அபேசேகர கைது செய்யப்பட்டு நேற்று வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

நேற்று மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே எதிர்வரும் 21ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டு, சட்டவிரோதமான முறையில் துப்பாக்கி வைத்திருந்தமை தொடர்பாக சிலாபம் மேல் நீதிமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த சிசிர குமாரவுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி அவருக்குப் பிணை வழங்கப்பட்டதுடன், ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடைப்பட்டதொரு நேரத்தில் சிலாபம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், 2018ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி, பிரதிவாதியின் தரப்பினரால் சிலாபம் மேல் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்த கோரிக்கைக்கு அமைய, வாராந்தம் கையொப்பமிட வேண்டும் என்ற நிபந்தனை தளர்த்தப்பட்டது.

அத்துடன், ஒவ்வொரு மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை, சிலாபம் பொலிஸ் நிலையம் வந்து கையொப்பமிடவேண்டும் என நீதிமன்றம் அறிவித்திருந்தது.

எனினும் அவர் நிபந்தனையை மீறியிருப்பதாக நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட நிலையிலேயே கடந்த ஒக்ரோபர் 10ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பாண் விலை அதிகரிப்பு

கொழும்பு, நவ. 16

நேற்று நள்ளிரவு முதல் பாணின் விலை 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கோதுமை மாவின் விலை 8.50 ரூபாவால் அதிகரிக்கப்படுவதன் காரணமாக பாண் விலை இவ்வாறு அதிகரிக்கப்பட்டதாக அவர் கூறினார். (ஐ)

## இரட்டைக் குழந்தைகளின் நலனுக்காக ஜனாதிபதி நிதி



கொழும்பு, நவ. 16

இரட்டைப் பிள்ளைகளைக் கொண்ட 69 குடும்பங்களுக்கு நிதி அன்பளிப்பு வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.


இரட்டைக் குழந்தைகள், ஒரே தடவையில் பிறந்த மூன்று, நான்கு மற்றும் ஐந்து பிள்ளைகளைக் கொண்ட 69 குடும்பங்களுக்கு அந்தப் பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக ரூபா 10 இலட்சம், 20 இலட்சம் மற்றும் 25 இலட்சம் வீதம் இதன்போது நிதி அன்பளிப்பு வழங்கப்பட்டது.

இரட்டைக் குழந்தைகளைப் பெற்றுக் கொண்ட போதிலும் அவர்களை வளர்த்து ஆளாக்குவதில் பொருளாதார சிரமங்களை எதிர்நோக்கும் குடும்பங்களுக்கு நிதி அன்பளிப்பு வழங்கும் வேலைத்திட்டம் ஜனாதிபதியின் ஆலோசனைக்கேற்ப ஜனாதிபதி செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அதற்கமைய நாடெங்கிலுமுள்ள இரட்டைப் பிள்ளைகளின் நலனுக்காக பெருமளவு நிதி வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே நாட்டின் எதிர்கால சந்ததியினரை பாதுகாப்பதற்காக ஜனாதிபதி அவர்களினால் 2019ஆம் ஆண்டு உலக சிறுவர் தினத்துடன் இணைந்ததாக விசேட நிதியமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், அந்நிதியத்திற்கான நிதி ஒதுக்கீட்டினை பெற்றுக்கொள்வதற்காக திரிதரு சம்பத்த எனும் பெயரில் புதிய அதிர்ஷ்ட இலாபச் சீட்டு ஜனாதிபதியால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. (ஐ)



# ஐரோப்பிய கண்காணிப்பாளர்கள் நேற்று வவுனியாவுக்கு வருகை!




வவுனியா, நவ. 16
ஜனாதிபதி தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில் ஐரோப்பிய தேர்தல் கண் காணிப்பாளர்கள் இலங் கைக்கு வருகை தந்துள்ள னர்.

இந்நிலையில், வவுனியாவில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர் தல் கண்காணிப்பாளர்கள் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்படி குறித்த தேர்தல் கண்காணிப்பாளர்கள், வவுனியாவில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று பார்வையிட்டனர்.

இதேவேளை, வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் 2200 பேர் இந்த தேர்தலில் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தேர்தல் பணியாளர்கள் 50 பேர் கொழும்பு வைத்தியசாலையில்!

கொழும்பு, நவ. 16
கொழும்பு ரோயல் கல்லூரியில் தேர்தல் கடமையில் இருந்த 50 அதிகாரிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உணவு ஒவ்வாமை காரணமாக கொழும்பு தேசிய வைத்தி யசாலையில் அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்த லுக்கான பணிகளில் ஈடுபட்டிருந்தவர்களே இவ்வாறு பாதிக்கப் பட்டுள்ளனர். (ஐ)

# அம்பாந்தோட்டையில் போலி வாக்குச்சீட்டுகள்!




கொழும்பு, நவ. 16
அம்பாந்தோட்டையில் வாக்குப் பெட்டி களைக் கொண்டு செல்லப் பயன்படுத்தப்படும் வாகனத்தில் போலி வாக்குச் சீட்டுகள் கண்டு பிடிக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித் தனர்.

இன்று சனிக்கிழமை ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் வாக்களிப்பு நிலை யங்களுக்கு வாக்குப்பெட்டிகள் நேற்றுக் காலை அனுப்பிவைக்கப்பட்டன.

இதன்போது அம்பாந்தோட்டையில் வாக்குப் பெட்டியை ஏற்றிச் செல்லும் ஹைஏஸ் வானில் போலி வாக்குச்சீட்டுகள் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## அதிவேக நெடுஞ்சாலை பஸ் கட்டணம் குறைப்பு

நேற்று நள்ளிரவு முதல் அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் பஸ்களுக்கான போக்குவரத்துக் கட்ட ணத்தை குறைக்க தீர்மானித் துள்ளதாகப் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை கள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, 10 ரூபா மற்றும் 20 ரூபா வீதம் பஸ் கட்டணங்கள் குறைக்கப் படும் என அமைச்சர் குறிப் பிட்டார். (ஐ)

## கோதுமை மா விலை அதிகரிப்பு என வெளியான செய்தி பொய்!

கொழும்பு, நவ. 16
கோதுமைமாவின் விலை அதிகரிப்புஎனஊடகங்களில் வெளியாகிய செய்தியை நிதி அமைச்சர் மங்கள சமர வீர அடியோடு மறுத்துள்ளார்.

பிறிமாகோதுமைமாவின் விலை நேற்று வெள்ளிக் கிழமை நள்ளிரவு முதல் அதி கரிப்பதாக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

அந்தச் செய்தியை ஏனைய ஊடகங்களும் பிரதி செய்து வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில் நிதி அமைச்சர் மங்கள சமரவீர இந்தச் செய்தியை உண்மை க்குப் புறம்பானது என்று குறிப்பிட்டுள்ளார்.

கோதுமை மாவின் விலையைஅதிகரிக்கஅமைச் சரவையின் உப குழு வான வாழ்கைச் செலவு குழு எந்த வொரு அனுமதியையும் வழங்கவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

(முன்னர் வந்த செய்தி கள் 5, 11 ஆம் பக்கங்களில்)



# வடமாகாண
# மரநடுகை மாதம்

## கார்த்திகை 1 - 30, 2019

கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல,
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்



மாண்ட வீரர் கனவு பலிக்க
மழையின் பொழிவில் தமிழ் மண் குளிக்க...

ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

TAMIL NATIONAL GREEN ORGANIZATION


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.11.2019 இல் வெளியிடப்பெற்றது.



# பிள்ளைகளின் வாழ்க்கைக்காக அனைவரையும் வாக்களிக்கச் செய்வது தாய்மார்களின் பொறுப்பாகும்

16ம் திகதி காலையில்
அனைவரையும் வாக்களிப்பு
நிலையத்திற்கு அனுப்புங்கள்